# பேனா குரல்

## PENA KURAL

Tamil Monthly

தமிழ் மாத இதழ்

மலர்: 01 இதழ்: 11 செப்டம்பர் 2023 விலை: ₹ 20/-



# இனி வரும் காலம் இந்தியாவின் காலம்தான்



வெற்றிகரமாக விண்ணில் சீறி பாய்ந்த ஆதித்யா எல்-1 விண்கலம்

www.penakural.com

SEVA
SAMARPAN
SANRAKSHAN

## Making of an Education Superpower

# PM-SHRI SCHOOLS

Pradhan Mantri Schools for Rising India

- Upgradation & development of over **14,500 schools** across the country
- Showcase of all components of the **NEP 2020**
- **Lakhs of students** to be benefitted





NEP - National Education Policy
Source- GoI

பேனா குரல்
R.Dis. No.: 939/2022 PENA KURAL தமிழ் மாத இதழ்
மலர்: 01 இதழ்: 11 செப்டம்பர் 2023 விலை: ₹ 20/- ஆண்டு சந்தா: ₹ 240/-

**தலையங்கம்**

ஆசிரியர் குரல்

# தனது இடத்தை எட்டியது இந்தியா!

பிரபஞ்ச ரகசியம் குறித்துத் தெரிந்துகொள்ள இந்தியா இப்போது இன்னொரு முயற்சியை முன்னெடுத்திருப்பதை உலகமே வியந்து பார்த்துக் கொண்டிருக்கிறது.

'சந்திரயான்-3' வெற்றியைத் தொடர்ந்து விண்ணில் ஏவப்பட்டிருக்கும் 'ஆதித்யா எல்-1' விண்கலம் சூரியனின் புறவெளியை ஆய்வு செய்ய புறப்பட்டிருக்கிறது. பிஎஸ்எல்வி சி-57 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவிலிருந்து கடந்த சனிக்கிழமை வெற்றிகரமாக ஏவப்பட்டிருக்கும் விண்கலத்தைப் போலவே, இந்தியாவின் சாதனையும், மரியாதையும் சர்வதேச அரங்கில் உயர்ந்து கொண்டிருக்கிறது.

உலகின் முதல் நூல் என்று கருதப்படும் ரிக் வேதம், நவீன அறிவியல் தனது அரிச்சுவடிப் பாடத்தைப் படிப்பதற்கு ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், வான் மண்டலத்தில் சூரியனை மையமாகக் கொண்டு கிரகங்கள் சுற்றி வருகின்றன என்று குறிப்பிட்டிருப்பதை இப்போது நினைத்தால் பிரமிப்பாக இருக்கிறது. இத்தனை பொருள்செலவும், உழைப்பும், தொழில்நுட்பமும் இல்லாமல் விண்வெளி ஆய்வுகள் ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அன்றைய பாரதத்தில் எப்படி சாத்தியமாயிற்று என்பது விடைகாண முடியா ரகசியம்.

ஊற்று நீர் பாய்ந்து வெளிவருவதுபோல, நம்மிடையே மறைந்து கிடந்த ஆற்றல் திடீரென்று பாய்ந்து எழுகிறதோ என்று எண்ணத் தோன்றுகிறது. அதனால்தான், மிகக் குறைந்த செலவில் மிகத் துல்லியமாகத் திட்டமிட்டு இந்திய விண்வெளி ஆய்வகத்தின் விஞ்ஞானிகளால் ஒன்றன் பின் ஒன்றாக சாதனைகளைப் படைக்க முடிகிறதோ, என்னவோ.

'ஆதித்யா எல்-1' விண்கலத்தின் மூலம் சூரியனை ஆய்வு செய்யும் முயற்சியில் இறங்கி இருக்கும் நான்காவது நாடாக இந்தியா உயர்ந்திருக்கிறது. செவ்வாய், சந்திரன் ஆகியவற்றைத் தொடர்ந்து சூரியனை ஆய்வு செய்யும் முனைப்பில் சிறிது காலமாகவே நமது இஸ்ரோ விஞ்ஞானிகள் தீவிரம் காட்டி வந்தனர். 2008-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் 'ஆதித்யா-1' திட்டம் அறிவிக்கப்பட்டது. பூமியிலிருந்து 200 கி.மீ. தொலைவில் 800 கிலோ எடையுள்ள விண்கலத்தை நிலைநிறுத்தி சூரியனை ஆய்வு செய்வது என்பதுதான் முதலில் திட்டம்.

நமது விஞ்ஞானிகளுடைய நுண்ணறிவின் உன்னதம் அப்போதுதான் வெளிப்பட்டது. வெறும் 800 கி.மீ. தூரத்தில் விண்கலத்தை நிலைநிறுத்துவதற்கு பதிலாக, 'லாக்ராஞ்சியன் பாயிண்ட்' என்கிற புள்ளியிலிருந்து பார்க்கும்போது சூரியனின் வெப்பம் மிகுந்த கொரோனா மண்டலத்தைத் துல்லியமாக ஆய்வு செய்ய முடியும் என்று தீர்மானித்தது புத்திசாலித்தனமான முடிவு, நாசா விஞ்ஞானிகளின் பாராட்டைப் பெற்றுத் தந்திருக்கிறது.

இந்தப் புள்ளியிலிருந்து கிரகண காலத்திலும் சூரியனைத் தொடர்ந்து கண்காணிக்க முடியும். இந்தப் புள்ளி கோல்களின் சுழற்சிக்கேற்ப 23 நாள்களுக்கு ஒருமுறை மாறும். 'ஆதித்யா எல்-1' விண்கலமும் அதற்கேற்றாற்போல தனது நிலையை மாற்றிக்கொள்ளும் விதத்தில் வடிவமைக்கப்பட்டிருக்கிறது.

எல்-1 புள்ளியில் நிறுத்தி வைக்கப்பட இருக்கும் 'ஆதித்யா எல்-1' விண்கோள் மூலம் சூரிய வெடிப்புகளைக் கண்காணித்து ஆய்வு மேற்கொள்ள முடியும். விண்வெளியில் நிலைநிறுத்தப்பட்டிருக்கும் கண்காணிப்பு மையமாக நமது விண்கலம் இருக்கும்.

உலகமே இந்தியா அனுப்பி இருக்கும் 'ஆதித்யா எல்-1' விண்கலத்தை ஆவலுடனும், ஆர்வத்துடனும், ஆச்சரியத்துடனும் உற்று நோக்கிக் கொண்டிருக்கிறது.

— **ராதிகா சிவசங்கர்**, ஆசிரியர்



# வெற்றிகரமாக விண்ணில் சீறி பாய்ந்த ஆதித்யா எல்-1 விண்கலம்

**சூரியனை ஆய்வு செய்ய போகும் 5வது நாடு என்ற பெருமை இந்தியாவுக்கு கிடைத்தது;**

சூரியனை பற்றி ஆய்வு செய்வதற்காக "ஆதித்யா - எல் 1' என்ற விண்கலம் ஸ்ரீஹரிகோட்டா, சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து வெற்றிகரமாக சூரியனை நோக்கி வெற்றிகரமாக பாய்ந்தது. ஐரோப்பா, அமெரிக்கா, ஜப்பான், சீனாவிற்கு பிறகு, சூரியனை ஆய்வு செய்ய போகும் 5வது நாடு என்ற பெருமை இந்தியாவுக்கு கிடைத்தது. 'இஸ்ரோ' எனப்படும் இந்திய விண்வெளி ஆய்வு மையம், முதல்முறையாக சூரியனை பற்றி ஆய்வு செய்வதற்காக, 'ஆதித்யா - எல்1' விண்கலத்தை வடிவமைத்துள்ளது. மொத்தம், 1,480.70 கிலோ எடை உடைய, அந்த விண்கலத்தை சுமந்தபடி, ஆந்திராவின் ஸ்ரீஹரிகோட்டா, சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து, 'பி.எஸ்.எல்.வி., - சி57' ராக்கெட் சூரியனை நோக்கி



பாய்ந்தது.விண்ணில் ஏவப்பட்டது முதல் திட்டமிட்டபடி அடுத்தடுத்த கட்டங்களை கடந்து வெற்றிகரமாக பயணிக்கிறது. ராக்கெட் இயல்பாக பயணம் செய்கிறது. செயல்பாடுகளும் இயல்பாக உள்ளன. விஞ்ஞானிகள் இடைவிடாமல் கண்காணித்து வருகின்றனர் என இஸ்ரோ கூறியுள்ளது.

இதன் வாயிலாக, சூரியனால் ஏற்படும் அபாயங்களை முன்கூட்டியே கண்டறிய



முடியும். ஆதித்யா - எல்1 விண்கலத்தில் உள்ள VEIC தொழில்நுட்பத்தை பெங்களூரு GREST ஆராய்ச்சி மையத்தில் சோதனை செய்தனர்.

**நிலைநிறுத்தம்**

'ஆதித்யா - எல் 1' விண்கலம் 1 மணி நேரம் 3 நிமிடங்களுக்கு பின் திட்டமிடப்பட்ட புவி வட்ட பாதையில் வெற்றிகரமாக நிலை நிறுத்தப்பட்டது பூமி - சூரியன் அமைப்பில், பூமியில் இருந்து, 15 லட்சம் கி.மீ., தூரம் உள்ள, 'லாக்ரேஞ்ச் எல்1' மைய புள்ளியில், ஆதித்யா - எல்1 விண்கலம் 125 நாட்கள் பயணத்திற்கு பின் நிறுத்தப்படும். அங்கிருந்தபடி, விண்கலத்தில் பொருத்தப்பட்டுள்ள ஏழு அதிநவீன கருவிகள் வாயிலாக, சூரியனின் வெளிபகுதி வெப்ப சூழல், வளி மண்டலம் மற்றும் வெப்ப நிலையின் இயக்கவியல், ஒளிவட்டம், கதிர்வீச்சு, காந்தபுலம், சூரிய காற்றின் தன்மை, சூரியனின் எக்ஸ்ரே கதிர் உள்ளிட்டவை குறித்து ஆய்வு செய்யப்படும்.

**ஜனாதிபதி பாராட்டு**

ஜனாதிபதி திரவுபதி முர்மு வெளியிட்ட அறிக்கை: இந்தியாவின் முதல் சூரியப் பயணமான ஆதித்யா-எல்1 இன் ஏவுதல், இந்தியாவின் உள்நாட்டு விண்வெளித் திட்டத்தை ஒரு புதிய பாதைக்கு அழைத்துச் செல்லும் ஒரு முக்கிய சாதனையாகும். விஞ்ஞானிகள் மற்றும் பொறியாளர்களை நான் வாழ்த்துகிறேன். இஸ்ரோவின் ஆய்வுப் பணி வெற்றியடைய என் மனமார்ந்த வாழ்த்துக்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

**பிரதமர் பாராட்டு**

ஆதித்யா எல்1 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தப்பட்டதற்கு பாராட்டு தெரிவித்து பிரதமர் மோடி வெளியிட்ட அறிக்கையில், பிரபஞ்சம் பற்றிய புரிதலை ஏற்படுத்த விஞ்ஞானிகளின் அயராத முயற்சி தொடரட்டும், இந்தியா தனது விண்வெளி பயணத்தை தொடர்கிறது எனக்கூறியுள்ளார்.

**விஞ்ஞானிகள் பேட்டி**

பின்னர் இஸ்ரோ தலைவர் சோம்நாத் கூறுகையில், 125 நாட்கள் பயணித்து ஆதித்யா எல்1 விண்கலம் எல்1 பகுதியை அடையும். சரியாக 648 கி.மீ., உயரத்தில் ராக்கெட்டில் இருந்து விண்கலம் தனியாக பிரிந்தது. புவி வட்டப்பாதையில் நிலைநிறுத்தப்பட்ட விண்கலம் சரியான சுற்றுவட்டப்பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்றார்

மத்திய அமைச்சர் ஜிதேந்திர சிங் கூறுகையில்: சந்திரயான்3, ஆதித்யா வெற்றி மகிழ்ச்சி அளிப்பதாக கூறினார்.

ஆதித்யா எல்1 திட்ட இயக்குநர் நிகர் ஷாஜி கூறியாவது: ஆதித்யா எல்1 விண்கலம் வெற்றிகரமாக ஏவப்பட்டதன் மூலம் திட்டக்குழுவின் கனவு நிறைவேறியுள்ளது. மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. ஆதித்யா -எல்1 தனது 125 நாள் பயணத்தை துவக்கி உள்ளது. இந்த விண்கலம் இலக்கை எட்டும் போது அது இந்திய விண்வெளித்துறையின் மிகப் பெரிய பொக்கிஷமாக இருக்கும் வெற்றிக்கு உதவிய வல்லுநர் குழுவுக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு அவர் கூறினார்.




# India or Bharat?

## நாட்டின் பெயரை மாற்ற முடியுமா?

வரும் நாடாளுமன்ற சிறப்பு கூட்டத்தொடரில் இந்தியாவின் பெயரை ‘பாரத்’ என மாற்றம் செய்ய மத்திய அரசு சட்ட திருத்த மசோதா கொண்டு வர உள்ளதாக தகவல்கள் பரவி வருகிறது. இந்நிலையில் தான் நாட்டின் பெயரை எப்படி மாற்ற மத்திய அரசு நினைத்தால் நாடாளுமன்றத்தில் பின்பற்றப்படும் நடைமுறை என்ன? என்பது குறித்த முக்கிய தகவல் வெளியாகி உள்ளது.

அடுத்த ஆண்டு நாடாளுமன்ற தேர்தல் நடைபெற உள்ளது. இதில் பாஜகவை வீழ்த்தும் முனைப்பில் காங்கிரஸ், திமுக உள்பட 26 கட்சிகள் இணைந்து ‘இந்தியா’ என்ற பெயரில் கூட்டணியை உருவாக்கி உள்ளன. நம் நாட்டின் பெயர் ‘இந்தியா’ என இருக்கும் நிலையில் அந்த பெயரிலேயே எதிர்க்கட்சிகள் கூட்டணி அமைத்துள்ளன.

இதற்கிடையே தான் வரும் 9 மற்றும் 10 ஆகிய தேதிகளில் தலைநகர் டெல்லியில் ஜி20 மாநாடு நடைபெற உள்ளது. இதில் பங்கேற்கும் விருந்தினர்களுக்கு ஜனாதிபதி திரௌபதி முர்மு டின்னர் விருந்து வழங்க உள்ளார். இதற்கான அழைப்பிதழ் தற்போது வெளியாகி உள்ளது.

அதில் President of India என்பதற்கு பதில் President of Bharat என அச்சிடப்பட்டுள்ளது. இது இந்தியாவின் பெயரை பாரத் என மாற்ற மத்திய அரசு மேற்கொள்ளும் முயற்சியின் முதல் நடவடிக்கை என கூறப்படுகிறது. அதாவது **எதிர்க்கட்சிகள் ‘இந்தியா’ என தங்களின் கூட்டணிக்கு பெயர் சூட்டியுள்ளன. இதனால் இந்தியா என பிரதமர் மோடி பேசினால் அது ‘இந்தியா’ கூட்டணியை குறிக்கவும் வாய்ப்புள்ளது.**




இத்தகைய சூழலில் தான் இந்தியாவின் பெயரை 'பாரத்' என மாற்ற மத்திய அரசு முடிவு செய்துள்ளதாக தகவல்கள் பரவி வருகின்றன. அதன்படி தான் ஜனாதிபதியின் அழைப்பிதழில் President of Bharat என இருப்பதாக தகவல்கள் பரவி வருகிறது. மேலும் இந்தியாவின் பெயரை பாரத் என மாற்றம் செய்வதற்கான சட்டத்திருத்த மசோதாவை மத்திய பாஜக அரசு வரும் 18ம் தேதி தொடங்கும் சிறப்பு நாடாளுமன்ற கூட்டத்தில் தாக்கல் செய்யலாம் என கூறப்படுகிறது.

இந்நிலையில் தான் தற்போது இந்தியாவின் பெயரை பாரத் என மாற்றம் செய்ய வேண்டும் என்றால் எத்தகைய நடைமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் என்பது பற்றிய முக்கிய தகவல்கள் வெளியாகி உள்ளன. அதன் விபரம் வருமாறு: அதாவது நம் நாட்டை இப்போது இந்தியா என்றும் பாரத் என்றும் அழைக்கலாம். ஏனென்றால் இந்த 2 பெயர்களும் இந்திய அரசியலமைப்பு சட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

இத்தகைய சூழலில்தான் மத்திய பாஜக அரசு நம் நாட்டுக்கு இந்தியா என்ற பெயருக்கு பதில் பாரத் என பெயர் சூட்ட நினைத்தால் முதலில் அதுதொடர்பாக சட்ட திருத்த மசோதாவை நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டும். தற்போது இந்தியாவின் அரசியலமைப்பு சட்டப்பிரிவு ஒன்று தான் நம் நாட்டை ''இந்தியா, அதுதான் பாரத்'' என்று கூறுகிறது. இதனால் அரசியலமைப்பு சட்டம் ஒன்றில் திருத்தம் கொண்டு வரப்பட வேண்டும்.

இந்த சட்டத்திருத்த மசோதா நாடாளுமன்றத்தின் இரு சபைகளிலும் நிறைவேற்றப்படும் பட்சத்தில் ஜனாதிபதி திரௌபதி முர்மு ஒப்புதலுடன் சட்டமாக்கப்படும். இதையடுத்து நம் நாட்டை இந்தியா என்பதற்கு பதில் பாரத் என்ற பெயரில் அழைக்க முடியும். மேலும் அரசியலமைப்பு சட்ட திருத்தத்தையும் வெறுமனே செய்து முடித்து விட முடியாது. ஏனென்றால் அதற்கும் சில விதிகள் வரையறைக்கப்பட்டுள்ளன.

அதாவது இந்திய அரசியலமைப்பின் 368 வது பிரிவு தான் ஒரு அரசியலமைப்பு சட்டத்திருத்தத்தை எப்படி மேற்கொள்ள வேண்டும்? என்பதை கூறுகிறது. அதன்படி அரசியலமைப்பு சட்டத்தை 2 வழிகளில் திருத்தம் செய்ய முடியும். ஒன்று சிம்பிள் மெஜாரிட்டி திருத்தம் (Simple Majority Amendment). மற்றொன்று ஸ்பெஷல் மெஜாரிட்டி திருத்தம் (Special Majority Amendment) என்பதாகும்.

இந்த 2க்கும் சின்ன வித்தியாசம் உள்ளது. அதாவது சிம்பிள் மெஜாரிட்டி திருத்தம் என்பது சபையில் 50 சதவீத உறுப்பினர்களின் ஆதரவுடன் மேற்கொள்வது. இது இந்திய அரசியலமைப்பின் சட்டப்பிரிவின் கீழ் புதிய மாநிலம், மாநிலங்களில் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கையில் மாற்றம் செய்வது உள்ளிட்டவற்றை மட்டுமே இதன்படி மேற்கொள்ள முடியும்.

மாறாக பிற சட்ட திருத்தங்களுக்கு ஸ்பெஷல் மெஜாரிட்டி திருத்தம் என்பது தான் பின்பற்றப்பட்டு வருகிறது. இது சிம்பிள் மெஜாரிட்டி மூலம் நிறைவேற்றப்படுவதில் இருந்து வேறுபாடானது. அதாவது தற்போது இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 1யை மாற்றம் செய்வது உள்பட பெரும்பாலான சட்ட திருத்தங்கள் என்பது ஸ்பெஷல் மெஜாரிட்டி திருத்த முறையில்தான் நடக்கும்.

இந்த ஸ்பெஷல் மெஜாரிட்டி திருத்தம் என்பது நாடாளுமன்றத்தில் 66 சதவீதம் பேர் அதாவது 3ல் 2 பங்கு உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கெடுத்து ஓட்டளிப்பில் பங்கேற்று மசோதா வெற்றி பெற வேண்டும். இது நடந்தால் மட்டுமே இந்தியாவின் பெயரை பாரத் என மாற்றம் செய்வதற்கான இந்திய அரசியலமைப்பு சட்டம் 1ல் திருத்தம் கொண்டு வர முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இனி வரும் காலம் இந்தியாவின் காலம்தான்

உலகக் கோப்பை செஸ் போட்டியில் உலகின் தலைசிறந்த வீரரான நார்வேயின் மேக்னஸ் கார்ல்செனிடம் இறுதிச்சுற்றில் தோல்வியைத் தழுவ நேர்ந்தாலும், இந்திய நட்சத்திரமான ரமேஷ்பாபு பிரக்ஞானந்தா தலைநிமிர்ந்து நிற்கிறார். அவர் வெளிப்படுத்திய மன உறுதியும், பொறுமையும், சாதுர்யமும் அந்தப் பதினெட்டு வயது இளைஞரை இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரமாக உயர்த்தி இருக்கிறது.

அஜர்பைஜானின் பாகு நகரில் உலகக் கோப்பை செஸ் போட்டிக்காக அணிதிரண்டிருந்தவர்கள், சர்வதேச முதல்வரிசை வீரர்கள் என்பதை நாம் உணர வேண்டும். இறுதிச் சுற்றுவரை பதற்றமே இல்லாமல், வெற்றி பெற்று பிரக்ஞானந்தா எதிர்கொண்டது யாரைத் தெரியுமா? கடந்த 12 ஆண்டுகளாக, உலக செஸ் அரங்கில் தனது முதலாவது இடத்தை நழுவ விடாமல் தக்க வைத்துக் கொண்டிருக்கும் பிரசித்தி பெற்ற வீரர் மேக்னஸ் கார்ல்செனை...

இறுதிச் சுற்றில் வழக்கமான 'கிளாசிக்கல்' ஆட்டங்கள் வெற்றி தோல்வியின்றி முடிந்தன. வேறு வழியில்லாமல், இரண்டு 'டை-பிரேக்கர்' ஆட்டங்கள் மூலம் வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பது என்று முடிவாகியது. மூன்றாவது நாளில் நடைபெற்ற 'டை-பிரேக்கர்' ஆட்டத்தின் இரண்டாவது வாய்ப்பின் 22-ஆவது நகர்த்தலில் 'டிரா' ஆனதால், கார்ல்சென் வெற்றி பெற்றார்.

நான்கு முறை உலக சாம்பியன் பட்டம் பெற்றிருந்தாலும், இதுவரை கார்ல்செனுக்கு உலகக் கோப்பையை வெல்ல முடிந்ததில்லை. அவரது முதல் உலகக் கோப்பை வெற்றியாக இது அமைந்தது. பிரக்ஞானந்தா இதற்கு முன்னர் மூன்று முறை கார்ல்செனை வீழ்த்தி இருந்தாலும், இந்த முறை அந்த வாய்ப்பு நழுவியது. ஆனாலும், உலகக் கோப்பை செஸ் போட்டியில் விஸ்வநாதன் ஆனந்துக்குப் பிறகு இறுதிச் சுற்றுவரை வந்த பெருமைக்குரிய இந்திய இளைஞர் என்று பிரக்ஞானந்தா பெருமையடையலாம்.




இறுதிச் சுற்றை அடைவதற்கு, பிரக்ஞானந்தா பல முன்னணி செஸ் வீரர்களை வீழ்த்திய விதம், பலரையும் வியப்பில் ஆழ்த்தியது. உலக செஸ் தரவரிசையில் இரண்டாம் இடத்தில் இருக்கும் ஹிகாரு நகாமுராயை நான்காம் சுற்றிலும், மூன்றாம் இடத்தில் இருக்கும் ஃபாபியானோ கருனாவை அரையிறுதிச் சுற்றிலும் தோற்கடித்தார். இறுதிச் சுற்றை எட்டியிருப்பதால், அடுத்த உலக சாம்பியனைத் தீர்மானிக்கும் 'கேண்டிடேட்ஸ்' போட்டியில் இடம்பெறும் வாய்ப்பு பிரக்ஞானந்தாவுக்குக் கிடைத்திருக்கிறது.

இந்த முறை உலகக் கோப்பை போட்டியில் இந்தியாவின் பங்களிப்பு மிக அதிகம். காலிறுதிச் சுற்றில் பங்கெடுத்த எட்டு பேரில் நான்கு பேர் இந்தியர்கள். அந்த நால்வரில் மூவர் இன்னும் 20 வயது பூர்த்தியாகாத இளைஞர்கள். செஸ்ஸில் உலகளாவிய அளவில் முன்னணி வீரர்களை உருவாக்கும் நாடாக இந்தியா உயர்ந்திருக்கிறது என்பதை இது உணர்த்துகிறது.

பிரக்ஞானந்தா மட்டுமல்லாமல், குகேஷ், அர்ஜுன் எரிகைசி, பிரீதி குஜராத்தி, நிஹால் ஜெரீன், எஸ்.எல். நாராயணன் என்று விஸ்வநாதன் ஆனந்த் வகுத்த பாதையில் பயணிக்க பல இளைஞர்கள் உயர்ந்திருக்கிறார்கள். மிகக் குறைந்த வயதில் உலக 'கிராண்ட் மாஸ்டர்' பட்டம் பெற்ற 14 வயது அமெரிக்கரான அபிமன்யு மிஸ்ரா, இந்திய வம்சாவளியினர். இவர்களில் பலரும் வருங்காலத்தில் உலக சாம்பியன்களாக,

செஸ் விளையாட்டு ஆளுமைகளாக வலம் வரப்போகிறார்கள்.

மேக்னஸ் கார்ல்சென் கிராண்ட் மாஸ்டரான பின் 16 மாதங்கள் கழிந்த பிறகுதான் பிரக்ஞானந்தா பிறந்தார். அவரது மூத்த சகோதரி வைஷாலியின் ‘செஸ்’ ஆர்வம் அவரையும் தொற்றிக் கொண்டது. ‘போலியோ’வால் பாதிக்கப்பட்ட தந்தை ரமேஷ்பாபு கொடுத்த ஊக்கமும், தாயார் நாகலட்சுமி அளித்த உற்சாகமும் வைஷாலியையும் பிரக்ஞானந்தாவையும் கிராண்ட் மாஸ்டர்களாக்கின. மிகக் குறைந்த வயதில் சர்வதேச மாஸ்டர் என்கிற சாதனை இப்போதும் பிரக்ஞானந்தாவுக்கு மட்டுமே உண்டு.

20 வயதுக்கு உள்பட்ட முதல் 100 ஜூனியர் செஸ் சாம்பியன்களில் 21 பேர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள். அடுத்த கால் நூற்றாண்டில், உலக செஸ் அரங்கில் இவர்கள் கொடிதான் பறக்கப் போகிறது. இந்தியா ‘செஸ்’ விளையாட்டில் முன்னணி இடத்தைப் பிடித்திருப்பதற்குப் பல காரணிகள் இருக்கின்றன.

‘எண்ம இந்தியா’ முனைப்பால் அனைவருக்கும் இணையதளம் சென்ற டைந்திருப்பது முக்கியமானகாரணம். கடந்த 12 மாதங்களில் 10,000 இந்தியர்கள் செஸ் போட்டிகளில் பங்கு பெற்றிருக்கிறார்கள். கார்ல்சென் - பிரக்ஞானந்தா இறுதிச் சுற்று விளையாட்டை 13 லட்சம் இந்தியர்கள் இணையத்தில் ஆர்வத்துடன் பார்த்தனர். செல்பேசி மூலம் பல்வேறு செஸ் விளையாட்டுத் தளங்களில் சுமார் 5 கோடி விளையாட்டுகள் இணையவழியில் நடக்கின்றன என்பது தெரியுமா? அதில் பங்கு பெறும் பலரும் இந்தியக் குழந்தைகள், இளைஞர்கள்.

செஸ் விளையாட்டு செலவில்லாதது. அதற்கான பயிற்சி வகுப்புகள் கிராமங்கள் வரை இந்தியாவில் நடத்தப்படுகின்றன. அதிக அளவில் செஸ் போட்டிகள் நிகழ்வதால், புதிய பல திறமைகள் அடையாளம் காணப்படுகிறார்கள்.

முதலாவது இடத்தில் இருக்கும் மேக்னஸ் கார்ல்செனை பதற்றமே இல்லாமல் எதிர்கொண்ட பிரக்ஞானந்தாவால் ‘டை-பிரேக்கர்’ விளை யாட்டில் வெற்றிபெற முடியாமல் போயிருக்கலாம். ஆனால், அடுத்தகட்டப் பாய்ச்சலுக்கான நகர்வுதான் அது.



# அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 2 ஆண்டுகள் நீட் தேர்வு பயிற்சி அளித்திடுக:

## அரசுக்கு டாக்டர் ராமதாஸ் வலியுறுத்தல்






பா.ம.க. நிறுவனர் டாக்டர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:–

மருத்துவப் படிப்பில் சேருவதற்கான நீட் தேர்வை எழுத விரும்பும் தமிழக அரசு பள்ளி மாணவர்களுக்கு பயிற்சியை தொடங்குவது குறித்து இதுவரை எந்த அறிவிப்பும் வெளியாகாதது ஏமாற்றமளிக்கிறது. கடந்த ஆண்டுகளில் மிகவும் தாமதமாக தொடங்கப்பட்ட நீட் பயிற்சியால் எந்த பயனும் விளையாத நிலையில், நடப்பாண்டிலாவது பயிற்சியை முன்கூட்டியே தொடங்க வேண்டும்.

நீட் விலக்கு பெறும் வரை, அரசு பள்ளி மாணவர்களுக்கு நீண்ட காலம் பயிற்சி அளிக்க வேண்டியதன் தேவையை தமிழக அரசு இப்போதாவது உணர்ந்து கொள்ள வேண்டும். 12–ம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் நவம்பர் மாதத்தில் தொடங்கி பிப்ரவரி மாதம் வரை வாரத்தில் ஒரு நாள் பெயரளவில் பயிற்சி அளிக்கும் முறையை கைவிட்டு, அனைத்து மாணவர்களுக்கும் குறைந்தது இரு ஆண்டுகள் பயிற்சி அளிக்கப்படுவதை பள்ளிக்கல்வித்துறை உறுதி செய்ய வேண்டும். அதற்காக 11–ம் வகுப்பு தொடங்கிய வாரம் முதல், 12–ம் வகுப்பு தேர்வு முடிந்து நீட் தொடங்குவதற்கு முந்தைய வாரம் வரை இரு ஆண்டுகளுக்கு முழுமையான பயிற்சியை திறமையான ஆசிரியர்கள், வல்லுனர்களைக் கொண்டு அரசு வழங்க வேண்டும்.

கடந்த ஆண்டில் வட்டத்திற்கு ஒரு மையத்தில் மட்டுமே நீட் பயிற்சி வழங்கப்பட்ட நிலையில், நடப்பாண்டில் வட்டத்திற்கு இரு மையங்களில் பயிற்சி வழங்கப்பட வேண்டும். பயிற்சியில் சேர விருப்பமுள்ள அனைத்து மாணவர்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். பயிற்சியில் சேரும் மாணவர்களுக்கு கையேடு மற்றும் வினா–விடை தொகுப்பை இலவசமாக வழங்க வேண்டும். நடப்பாண்டிற்கான பயிற்சி வகுப்புகளை அடுத்த வாரத்திலேயே தொடங்குவதற்கு தமிழக பள்ளிக்கல்வித்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# மனித - வனவிலங்கு மோதலை தடுக்க இறைச்சி கழிவுகளை திறந்தவெளியில் கொட்டாதீர்:

## வனத்துறையினர்

ஆனைமலை புலிகள் காப்பகத்திற்கு உட்பட்ட வால்பாறை, மானாம்பள்ளி ஆகிய வனச்சரகங்களில் புலி,கரடி, சிறுத்தை, செந்நாய் உள்ளிட்ட வன விலங்குகள் அதிக அளவில் உள்ளன. சோலைக் காடுகளும், பசுமை மாறாக் காடுகளும் உள்ளன.

இவற்றை பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. அதன் ஒரு பகுதியாக அக்காமலை புல்வெளி பகுதியை மத்திய அரசு தேசிய பூங்காவாக அறிவித்துள்ளது. வனத்தையும் அவற்றில் வாழும் வன விலங்குகளையும் பாதுகாக்க வனத்துறை யினர் தன்னார்வ அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றனர்.



அவற்றின் ஒரு பகுதியாக மனித-விலங்கு மோதலை தடுக்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. சமீப காலமாக வால்பாறை நகர் மற்றும் தேயிலை தோட்ட பகுதியில் திறந்த வெளியில் இறைச்சிக் கழிவுகள் கொட்டப்படுவதால் அப்பகுதிகளில் சிறுத்தை நடமாட்டம் அதிகரித்துள்ளது.

இது குறித்து வனத்துறையினர் கூறும்போது, “இறைச்சிக் கழிவுகளை திறந்த வெளியில் கொட்டுவதால் அவற்றைத் தேடி சிறுத்தை அடிக்கடி குடியிருப்பு பகுதிக்குள் நுழைகிறது. தனியார் தேயிலை தோட்ட நிர்வாகங்கள் இதை கண்காணித்து, இறைச்சிக் கழிவுகளை திறந்தவெளியில் கொட்டுவதை தவிர்க்க தொழிலாளர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.

திறந்த வெளியில் செயல்படும் இறைச்சிக் கடைகள் மீது நகராட்சி நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும். கடைகளில் இருந்து வெளியாகும் இறைச்சிக் கழிவுகளை திறந்த வெளியில் கொட்டுவதை தவிர்த்து பாதுகாப்பாக குழி தோண்டி புதைக்க வேண்டும். இதனால் வன விலங்குகள் இறைச்சிக் கழிவுகளை தேடி குடியிருப்பு பகுதிக்கு வருவது தவிர்க்கப்படும்.

மனித - வனவிலங்கு மோதல் தடுப்பு குழுவிற்குமக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எச்சரிக்கை மீறி திறந்தவெளியில் இறைச்சிக் கழிவுகளை கொட்டினால் வன உயிரின பாதுகாப்புச் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்” என்றனர்.

# குடியரசுத்தலைவர் ஆசிரியர்களுக்கு தேசிய விருதுகளை வழங்கினார்




ஆசிரியர் தினத்தையொட்டி, இன்று (செப்டம்பர் 5, 2023) புது தில்லி விஞ்ஞான் பவனில் நடைபெற்ற நிகழ்ச்சியில், குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு, நாடு முழுவதும் உள்ள ஆசிரியர்களுக்கு தேசிய விருதுகளை வழங்கினார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய குடியரசுத்தலைவர், ஆரம்பக் கல்வியானது ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்தது என தெரிவித்தார். பல கல்வியாளர்கள் குழந்தைகளின் சீரான வளர்ச்சிக்கான மூன்று-ஆங்கில எச் சூத்திரத்தைப் பற்றிப் பேசுகிறார்கள், என்றார்.

“அதில் முதல் எச் இதயம், இரண்டாவது எச் தலை மற்றும் மூன்றாவது எச் கை. இதயம் உணர்திறன், மனித மதிப்புகள், குணத்தின் வலிமை மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றுடன் தொடர்புடையது,” என்று அவர் பகிர்ந்து கொண்டார். “தலை அல்லது மூளை மனவளர்ச்சி, பகுத்தறியும் திறன் மற்றும் வாசிப்பு ஆகியவற்றுடன் தொடர்புடையது என்றும், கை என்பது கைமுறை திறன்கள் மற்றும் உடல் உழைப்புக்கு மரியாதையுடன் தொடர்புடையது,” என்றும் அவர் கூறினார்.

அத்தகைய முழுமையான அணுகுமுறையை வலியுறுத்துவதன் மூலம்

மட்டுமே குழந்தைகளின் அனைத்துத் துறை வளர்ச்சி சாத்தியமாகும் என்று அவர் கூறினார்.

ஆசிரியர் பணியில் பெண்களின் பங்களிப்பைக் கருத்தில் கொண்டு ஆசிரியர் விருதுகளைப் பெறும் பெண் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகமாக இருக்க வேண்டும் என குடியரசுத்தலைவர் வலியுறுத்தினார். மாணவிகள் மற்றும் ஆசிரியைகளை ஊக்குவிப்பது பெண்கள் அதிகாரம் பெறுவதற்கு மிகவும் முக்கியமானது என்று அவர் வலியுறுத்தினார்.

தேசியக் கல்விக் கொள்கை 2020ல் தேசத்தைக் கட்டியெழுப்புபவர்களாக ஆசிரியர்களின் முக்கியத்துவம் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

ஒவ்வொரு குழந்தையின் தனித்துவமான திறன்களை இனங்கண்டு அந்தத் திறன்களை உணர்திறனுடன் வளர்த்துக் கொள்ள உதவுவது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் கடமையாகும் எனவும் குடியரசுத்தலைவர் கூறினார். ஒவ்வொரு ஆசிரியரும் ஒரு வகுப்பில் உள்ள 40-50 குழந்தைகளிடையே அன்பைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பைப் பெறுவது ஒரு பெரிய பாக்கியம் என்றும் குடியரசுத்தலைவர் கூறினார்.

ஒவ்வொருவரும் தமது ஆசிரியர்களை நினைவுகூருவதாக குடியரசுத்தலைவர் தெரிவித்தார். ஆசிரியர்களிடமிருந்து குழந்தைகள் பெறும் பாராட்டு, ஊக்கம் அல்லது தண்டனை அவர்களின் நினைவுகளில் நிலைத்திருக்கிறது என்றும் அவர் கூறினார். குழந்தைகளை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் அவர்களுக்கு தண்டனை வழங்கினால், அதை அவர்கள் பின்னர் உணர்ந்து கொள்கிறார்கள் என்றும் குறிப்பிட்டார். அவர்களுக்கு அறிவைக் கொடுப்பதை விட அன்பையும் பாசத்தையும் கொடுப்பது முக்கியம் என்றும் குடியரசுத்தலைவர் கூறினார்.

## ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’: இந்திய யூனியன் மற்றும் அனைத்து மாநிலங்களுக்கும் எதிரான தாக்குதல் ராகுல் காந்தி




‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ என்ற எண்ணம் இந்திய யூனியன் மற்றும் அதன் அனைத்து மாநிலங்களுக்கும் எதிரான தாக்குதல் என்று ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

புதுடெல்லி, ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ குறித்து ஆராய முன்னாள் ஜனாதிபதி ராம்நாத் கோவிந்த் தலைமையில் சிறப்புக்குழு ஒன்றை அமைத்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது. நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல், மாநிலங்களுக்கான சட்டப்பேரவைத் தேர்தலை ஒரே நேரத்தில் நடத்த சாத்தியம் உள்ளதா என்பது குறித்து இந்த சிறப்புக்குழு ஆய்வு செய்து அறிக்கை அளிக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த குழுவில், காங்கிரஸ் மக்களவை குழு தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி, உள்துறை அமைச்சர் அமித்ஷா, குலாம் நபி ஆசாத் உள்ளிட்ட 8 பேர் இடம் பெற்றுள்ளனர். ஒரே நாடு ஒரே தேர்தல் குறித்து பரிந்துரைகளை மத்திய அரசுக்கு இந்தக் குழு அளிக்கும். இந்த குழுவில் இடம்பெறுவதற்கான அழைப்பை காங்கிரஸ் மக்களவைக்குழுத்தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி நிராகரித்துள்ளார்.

இந்த ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ திட்டத்திற்கு பல கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து உள்ளன. இந்த நிலையில் ‘ஒரே நாடு, ஒரே தேர்தல்’ என்ற எண்ணம் இந்திய யூனியன் மற்றும் அதன் அனைத்து மாநிலங்களுக்கும் எதிரான தாக்குதல் என்று காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக ராகுல் காந்தி வெளியிட்டுள்ள டுவிட்டர் பதிவில், “இந்தியா, அதாவது பாரதம் என்பது மாநிலங்களின் ஒன்றியம். ‘ஒரே தேசம், ஒரே தேர்தல்’ என்ற எண்ணம் இந்திய யூனியன் மற்றும் அதன் அனைத்து மாநிலங்கள் மீதான தாக்குதலாகும்“ என்று தெரிவித்து உள்ளார்.




தேங்காய்களின் முக்கியத்துவம் மற்றும் வாழ்வின் பல்வேறு அம்சங்களில் அவற்றின் பயன்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுதோறும் செப்டம்பர் 2ஆம் தேதி உலக தேங்காய் தினம் (World Coconut Day) கொண்டாடப்படுகிறது.

உலக தேங்காய் தினம் 2009இல் ஆசிய மற்றும் பசிபிக் தேங்காய் சமூகத்தால் (APCC) நிறுவப்பட்டது.

APCC என்பது ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் தேங்காய் உற்பத்தி செய்யும் நாடுகளிடையே ஒத்துழைப்பை ஊக்குவிக்கும் ஒரு அரசுகளுக்கிடையேயான அமைப்பாகும். செப்டம்பர் 2, 1969 இல் நிறுவப்பட்ட கிறி சிசிஇன் நிறுவன தினத்தை நினைவுகூரும் வகையில் இந்த நாள் உலக தேங்காய் தினமாக ஏற்றுக்கொள்ளப்பட்டது.

இது உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களின் வாழ்வாதாரத்தில் முக்கிய பங்கு வகிக்கும் தென்னை விவசாயத்தின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

**தேங்காய் பற்றிய சுவாரசியமான தகவல்கள்**

தேங்காய்கள் பெரும்பாலும் "வாழ்க்கை மரம்" என்று அழைக்கப்படுகின்றன. ஏனெனில் அவை உணவு, தண்ணீர் மற்றும் தங்குமிடம் மற்றும் கைவினைப்பொருட்களுக்கான பல்வேறு பொருட்களை வழங்குகின்றன.

தேங்காய் நீர் ஒரு இயற்கை எலக்ட்ரோலைட் நிறைந்த பானமாகும். தேங்காய் பல கலாச்சாரங்களில் பல்வேறு சடங்குகள் மற்றும் விழாக்களில் பயன்படுத்தப்படுகிறது.

பெரும்பாலும் தூய்மை, கருவுறுதல் மற்றும் செழிப்பு ஆகியவற்றைக் குறிக்கிறது. தென்னை மரங்கள் பறவைகள் மற்றும் பூச்சிகள் உட்பட பல்வேறு வனவிலங்குகளுக்கு வாழ்விடத்தை வழங்குகின்றன.

அவற்றின் சுற்றுச்சூழல் அமைப்புகளின் பல்லுயிர் பெருக்கத்திற்கு பங்களிக்கின்றன. தென்னை மரங்கள் 100 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் வாழக்கூடியவை.

மேலும் அவை தனது நீண்ட ஆயுட்காலம் முழுவதும் தேங்காய்களை உற்பத்தி செய்து கொண்டே இருக்கும்.

# கீரிப்பிள்ளைகளை வேட்டை: வனத்துறை அதிரடி ஆக்‌ஷன்!

## சுப்ரியா சாஹு வெளியிட்ட தகவல்

ஓவியம் வரையும் பிரஷ்கள் தயாரிப்பதற்காக கீரிப்பிள்ளைகள் கொல்லப்படுவதாகவும், இதைத் தடுக்கும் வகையில், 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிரஷ்களை பறிமுதல் செய்து, விற்பனையாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் வனத்துறை செயலாளர் சுப்ரியா சாஹு தெரிவித்துள்ளார்.

பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்பார்கள். ஆனால் பாம்பே பயந்து நடுங்கும் உயிரினம் என்றால் அது கீரிப்பிள்ளை. கீரிப்பிள்ளை புயல் வேகத்தில் தலையைப் பற்றிப் பிடித்து பாம்புக்கு தண்ணி காட்டிவிடும். கீரிக்கும் பாம்புக்கும் சண்டை ஏற்பட்டால் கீரியே ஜெயிக்கும். அப்படிப்பட்ட கீரிப்பிள்ளைகள் ஓவியம் வரையப் பயன்படுத்தப்படும் பிரஷ்களுக்காக வேட்டையாடப்படுகின்றனவாம்.

இது தொடர்பாக வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சுப்ரியா சாஹு தனது ட்விட்டர் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், “இந்திய வன உயிரின பாதுகாப்புச் சட்டத்தின்படி கீரிகளை கொல்வது தடை செய்யப்பட்டுள்ளது. ஆனால் ஓவியம் வரைய பயன்படுத்தப்படும் பிரஷ்கள் தயாரிக்க கீரிப்பிள்ளையின் முடிகள் பயன்படுத்தப்படுவதால் கீரிப்பிள்ளைகள் பெருமளவில் கொல்லப்படுகின்றன.

ஒரு கிலோ கீரி முடியை சேகரிக்க கிட்டத்தட்ட 50 கீரிப்பிள்ளைகள் கொல்லப்படுகின்றன. சட்டவிரோதமாக வன உயிரினங்கள் மற்றும் வன உயிரினப்பொருட்கள் விற்பனை செய்யப்படுவதைத் தடுக்கும்



நோக்கத்தில் தமிழ்நாடு வனம் மற்றும் வன உயிரின குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவு தொடங்கப்பட்டது.

இந்த பிரிவினர் கோவை மண்டலத்தில் இருந்து கீரி முடியால் தயாரிக்கப்பட்ட 3200 பெயிண்ட் பிரஷ்களையும், சென்னை மண்டலத்தில் இருந்து 7800 பிரஷ்களையும், மதுரை மண்டலத்தில் இருந்து 3000 பிரஷ்களையும் பறிமுதல் செய்துள்ளனர். தெரிந்தே வியாபாரத்தில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஓவியர்கள் சிந்தெடிக் பிரஷ்களை பயன்படுத்த வேண்டும். கீரிப்பிள்ளைகள் கொல்லப்படுவதை தவிர்க்க விழிப்புணர்வு இயக்கத்தை ஏற்படுத்தவுள்ளோம். வன உயிரிகளுக்கு ஆபத்து விளைவிக்கும் இந்த சட்டவிரோத வர்த்தம் நிறுத்தப்பட வேண்டும்“ எனத் தெரிவித்துள்ளார். அதிரடி நடவடிக்கை மேற்கொண்ட வன உயிரின குற்றங்கள் கட்டுப்பாட்டு பிரிவினருக்கு பாராட்டும் தெரிவித்துள்ளார்.

# பிரபஞ்சத்தில் இன்னொரு பூமி கண்டுபிடிப்பு: ஜப்பான் விஞ்ஞானிகள் ஆய்வில் புதிய தகவல்!



இன்றைய நவீன உலகில் அறிவியல் தொழில்நுட்பமும், விஞ்ஞான வளர்ச்சியும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வருகிறது. பிரபஞ்சத்தில் தொலை நோக்கியின் மூலமாகவும், அறிவியல் நுணுக்கங் களையும் வைத்து தற்போது வரை ஏராளமான கிரகங்கள், நட்சத்திரங்கள் போன்றவைகளை விஞ்ஞானிகள், ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்து வருகின்றனர். இந்த ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்று கொண்டு இருக்கிறது. இந்த நிலையில் தற்போது பூமியை போன்ற கிரகத்தை விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். ஜப்பானின் ஒசாகாவில் உள்ள கிண்டாய் பல்கலைக்கழகத்தின் பாட்ரிக் சோபியா லிகாவ்கா மற்றும் டோக்கியோவில் உள்ள ஜப்பானின் தேசிய வானியல் ஆய்வகத்தின் தகாஷி இடோ ஆகியோரின் சமீபத்திய ஆய்வில் இந்த தகவல் வெளியாகி இருக்கிறது.

அந்த கிரகம் பூமி போன்று இருப்பதாக அவர்கள் கணித்துள்ளனர். சூரிய குடும்பத்தில் நெப்டியூன் கோளுக்கு அடுத்துள்ள பகுதி கைபர் பட்டை எனப்படுகிறது. இது பனி பொருட்கள் நிறைந்த இடம் என கருதப்படுகிறது. இது 9-வது கிரகத்தை விட மிக அருகில் உள்ளது. ஆரம்பகால சூரிய குடும்பத்தில் இதுபோன்ற பல கோள்கள் இருந்ததால், ஒரு ஆதி கோளாக இருக்க முடியும் என்று அவர்கள் நம்புகின்றனர். கைபர் பெல்ட்டில் மில்லியன் கணக்கான பனிக்கட்டி பொருட்கள் இருப்பதாக அறியப்படுகிறது, அவை நெப்டியூனுக்கு அப்பால் அமைந்துள்ளதால் அவை டிரான்ஸ்-நெப்டியூனியன் பொருட்கள் என குறிப்பிடப்படுகிறது . இவை சூரிய குடும்பம் உருவானதில் இருந்து எஞ்சியவை என்று வானியலாளர்கள் நம்புகின்றனர்.

இந்த கிரகம் ஏற்கனவே சூரிய குடும்பத்தில் உள்ள 9 கோள்களில் இருந்து வேறுபட்டது. இது மிகவும் பெரியது என்பதால் தொலைதூர சுற்றுப்பாதையில் அமைந்துள்ளது என்றும் விஞ் ஞானிகள் கருதுகிறார்கள். இது நெப்டியூனை விட சூரியனில் இருந்து 20 மடங்கு தொலைவில் சுற்றி வருகிறது.

இருப்பினும் இன்று வரை வானியலாளர்கள் 9 கிரகம் இருப்பதாக மட்டுமே கூறி உள்ளனர். இதுபற்றி விஞ்ஞானிகள் கூறுகையில், 450 கோடி வருடங்களுக்கு முன்பு நமது


சூரியன் உருவாகியது. சூரியன் உருவாகிக் கொண்டிருந்தபோது அதனை சுற்றி சுழன்று கொண்டிருந்த தூசுக்களும் வாயுக்களும் விண்கற்களும் ஈர்ப்பு விசையின் காரணமாக ஒன்றுடன் ஒன்று மோதியது. இந்த மோதலின் காரணமாகவே சூரியத்தொகுதியில் உள்ள 8 கோள்களும் அதன் துணைக்கோள்களும் உருவானது.

இப்படி நடந்த மோதலில் ஒன்றுடன் ஒன்று மோதிய அனைத்து பொருட்களும் கோள்களாக மாறவில்லை. மீதம் இருந்த அனைத்தும் விண்வெளியில் மிதந்து கொண்டிருக்கின்றன. இப்படி எஞ்சிய பொருட்கள் சூரியத் தொகுதியின் உள்ளே சிறுகோள் பட்டை எனும் பகுதியில் சூரியனைச் சுற்றி வலம்வந்து கொண்டிருக்கின்றன. இந்த சிறுகோள் பட்டை போன்றே நெப்டியூன் கிரகத்திற்கு அப்பால் காணப்படும் சூரிய குடும்பத்தில் இருந்து வெளியேற்றப்பட்ட விண்கற்களின் அமைப்பே கைப்பர் பட்டை ஆகும். கைப்பர் பட்டையில் உள்ள மிகப்பெரிய கோளான புளூட்டோ 1930-ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டாலும் கைப்பர் பட்டையை விஞ்ஞானிகளால் முழுமையாக கண்டுபிடிக்க முடியவில்லை.

ஏனென்றால் புளூட்டோவை போன்று அதில் உள்ள ஏனைய பொருட்கள் எதுவும் சூரிய ஒளியை பிரதிபலிக்கவில்லை. தற்கால தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாகவே கைப்பர் பட்டை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது என்கின்றனர் விஞ்ஞானிகள். இந்த கைப்பர் பட்டை பகுதியில்தான் பூமி போன்ற கிரகம் இருக்கிறது. இது தொடர்பாக ஆய்வு செய்யப்படவேண்டியது அவசியம். நாங்கள் கண்டுபிடித்திருப்பது எல்லோரும் கூறிவரும் 9-வது கிரகம் அல்ல. சூரிய குடும்பத்தின் எல்லையில் இந்த கிரகம் உள்ளது என்கின்றனர் ஜப்பான் விஞ்ஞானிகள்.

சூரியனில் இருந்து இந்த புதிய கிரகம் சுமார் 200 வானியல் அலகு தொலைவில் உள்ளது. ஒரு வானியல் அலகு என்பது சூரியனுக்கும் பூமிக்கும் இடையிலான தூரமாகும். ஜப்பான் விஞ்ஞானிகளின் இந்த தகவல் வானியல் அறிஞர்களின் அடுத்தகட்ட தேடுதலுக்கு தூண்டுகோலாக அமைந்துள்ளது.

# அனல் மின் நிலையங்களுக்கு போதுமான அளவு நிலக்கரி கையிருப்பில் உள்ளது: நிலக்கரி அமைச்சகம் உறுதி




நாட்டில் அதிகரித்து வரும் எரிசக்தித் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமான அளவு நிலக்கரி இருப்பை நிலக்கரி அமைச்சகம் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த ஆண்டு அனல் மின் உற்பத்தி, முந்தைய ஆண்டின் இதே காலத்தில் 485.42 பில்லியன் யூனிட் (பியூ) உடன் ஒப்பிடும்போது (ஏப்ரல்ஆகஸ்ட் 2023) 6.58% அதிகரித்து 517.34 பியூ ஐ எட்டியது.

மின்சாரத் துறைக்கு நிலக்கரி அனுப்புவதைப் பொறுத்தவரை, ஏப்ரல் 2023 முதல் ஆகஸ்ட் 2023 வரை 202324 நிதியாண்டின் ஒட்டுமொத்த சாதனை 324.50 மில்லியன் டன்னாக இருந்தது, இது முந்தைய ஆண்டின் இதே காலத்தின் 306.70 மில்லியன் டன் என்பதுடன் ஒப்பிடும்போது 5.80% வளர்ச்சியாக உள்ளது.

31.08.23 நிலவரப்படி, சுரங்கங்கள், அனல் மின் நிலையங்கள், போன்றவற்றில் 31.08.2022ல் 68.76 மில்லியன் டன் என்பதுடன் ஒப்பிடும்போது, ஒட்டுமொத்த நிலக்கரி இருப்பு நிலை, 25.08% அதிகரிப்புடன் 86.00 மில்லியன் டன்னை எட்டியது. கூடுதலாக, கோல் இந்தியா லிமிடெட் (சிஐஎல்) நிறுவனத்தின் நிலக்கரி கையிருப்பு 31.08.23 நிலவரப்படி 45.33 மில்லியன் டன்னாக உள்ளது, இது 31.08.22 அன்று 31.12 மில்லியன் டன் நிலக்கரி கையிருப்புடன் ஒப்பிடும்போது 45.66% என்ற வளர்ச்சியைக் காட்டுகிறது.

இதன் மூலம் தடையற்ற மின்சார விநியோகத்தை வழங்குவதில் நிலக்கரி அமைச்சகம் உறுதியாக உள்ளது. இது தற்சார்பு இந்தியாவுக்கு வழிவகுக்கிறது.

# மகளிர் உரிமை தொகை திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்




தமிழகம் முழுவதும் 1.06 கோடி பெண்களுக்கு மாதம்தோறும் ரூ.1,000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தை, அண்ணா பிறந்தநாளான இன்று காஞ்சிபுரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

கடந்த 2021 சட்டப்பேரவை தேர்தலின் போது, குடும்பத் தலைவிகளுக்கு மாதம்ரூ.1,000 உரிமைத் தொகை வழங்கப்படும்என்று திமுக தனது தேர்தல் அறிக்கையில் தெரிவித்தது. இந்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில், இந்த ஆண்டு பட்ஜெட்டில் இத்திட்டத்துக்கான அறிவிப்பு வெளியிடப்பட்டது. ஒரு கோடி மகளிருக்கு உரிமைத் தொகை வழங்க ரூ.7,000 கோடி ஒதுக்கப்பட்டது.

இத்திட்டத்தை செயல்படுத்துவது குறித்து முதல்வர் ஸ்டாலின் தலைமையில் கடந்த ஜூலை மாதம் ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டது. அதில், முன்னாள் முதல்வர் கருணாநிதி நூற்றாண்டை முன்னிட்டு, இத்திட்டத்துக்கு ‘கலைஞர் மகளிர்உரிமை தொகை திட்டம்’ என்று முதல்வர் ஸ்டாலின் பெயர் சூட்டினார். அத்துடன், இத்திட்டத்துக்கான வழிகாட்டுதல்களும் வெளி யிடப்பட்டன.

இதற்கான விண்ணப்ப விநியோகம் மற்றும் விண்ணப்ப பதிவை தருமபுரியில் முதல்வர் ஜூலை 24ம் தேதி தொடங்கி வைத்தார். ஜூலை 24 முதல் ஆக.16ம் தேதி வரை 2 கட்டங்களாக இப்பணிகள் நடந்தன.

1.63 கோடி பேர் விண்ணப்பம்: பின்னர், சமூக பாதுகாப்பு ஓய்வூதியம் பெறுவோர், மாற்றுத் திறனாளி உதவித்தொகை பெறுவோரின் குடும்பத்தை சேர்ந்த பெண்களும் இத்திட்டத்தில் விண்ணப்பிக்கலாம் என்று முதல்வர் அறி வித்தார். இதையடுத்து, ஆக.18 முதல்20 ம் தேதி வரை தமிழகம் முழுவதும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு விண்ணப்பங்கள் பதிவு செய்யப்பட்டன. மொத்தம் 1.63 கோடி விண்ணப்பங்கள் பெறப்பட்டன.

பிறகு, வருமான வரி, வாகனப் பதிவு, மின் இணைப்பு உட்பட அரசிடம்இருந்த தகவல் தரவுகளுடன், விண்ணப்பதாரர்கள் அளித்த தகவல்கள் ஒப்பிடப்பட்டன. போதிய விவரங்கள் கிடைக்காதது மற்றும் சந்தேகம் உள்ள விண்ணப்பங்கள் தொடர்பாக கள அலுவலர்கள் ஆய்வு நடத்தி, தகவல்களை சரிபார்த்தனர். இதையடுத்து, 1 கோடியே 6 லட்சத்து 50 ஆயிரம் பெண்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

மாதாமாதம் அவர்களது வங்கிக் கணக்கிலேயே இத்தொகை செலுத்தப்படும் என்பதால், பயனாளிகளின் வங்கிக் கணக்கை சரிபார்க்கும் பணி கடந்த செப்.12ம் தேதி முதல் நடந்தது. இதற்காக அவர்களது வங்கிக் கணக்குக்கு ரூ.1 அனுப்பப்பட்டது. அவர்களை அதிகாரிகள் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு, வங்கிக் கணக்குக்கு பணம் வந்தடைந்த தகவலை உறுதி செய்தனர்.

இந்நிலையில், ஏற்கெனவே அறிவித்தபடி, அண்ணா பிறந்தநாளான இன்று இத்திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். காஞ்சிபுரம் பச்சையப்பன் ஆடவர் கல்லூரி மைதானத்தில் 10 ஆயிரம் மகளிருக்கு உரிமைத் தொகையை வழங்கி, கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இந்த விழாவுக்காக கல்லூரி மைதானத்தில் பிரம்மாண்ட பந்தல் அமைக்கப்பட்டுள்ளது.

அண்ணா சிலைக்கு மரியாதை: விழாவில் பங்கேற்பதற்காக, இன்று காலை 8 மணிக்கு திருவள்ளூர் மாவட்டம் உளுந்தை பண்ணை இல்லத்தில் இருந்து முதல்வர் ஸ்டாலின் புறப்படுகிறார். அங்கிருந்து விழா நடைபெறும் இடம்வரை 40 கி.மீ. தூரத்துக்கு வழிநெடுகிலும் முதல்வருக்கு திமுகவினர், பொதுமக்கள் சார்பில் உற்சாக வரவேற்பு அளிக்கப்படுகிறது. வழியில், காஞ்சிபுரம் நகராட்சி அலுவலகம் செல்லும் முதல்வர், அங்கு அண்ணா பிறந்தநாளை முன்னிட்டு, அவரது சிலைக்கு மாலை அணிவிக்கிறார். பின்னர், சின்ன காஞ் சிபுரத்தில் உள்ளஅண்ணா நினைவு இல்லம் சென்று மரியாதை செலுத்துகிறார்.

வங்கிக் கணக்கில் முன்கூட்டியே ரூ.1,000 செலுத்தப்பட்டதால் பெண்கள் மகிழ்ச்சி: கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார். திட்டத்தில் குழப்பம், குறைபாடு ஏற்படாமல் கண்காணிக்குமாறு முதல்வர் ஏற்கெனவே அறிவுறுத்தியதால், கடந்த சில நாட்களாக வங்கிக் கணக்கு சரிபார்ப்பு பணிகள் நடந்து வந்தன. 1.06 கோடி பயனாளிகளின் வங்கிக் கணக்குகளை சரிபார்க்க ரூ.1 அனுப்பப்பட்டது.

இந்நிலையில், திட்டம் தொடங்கப்படும் நாளான இன்று அனைத்து வங்கிக் கணக்குக்கும் ஒரே நேரத்தில் தொகையை விடுவித்தால் தொழில்நுட்ப சிக்கல் ஏற்படக்கூடும் என்பதால், அதை தவிர்க்கும் விதமாக, சென்னை உட்பட பல்வேறு மாவட்டங்களிலும் குறிப்பிட்ட அளவு பயனாளிகளின் வங்கிக் கணக்குகளுக்கு நேற்றே ரூ.1,000 உரிமை தொகை விடுவிக்கப்பட்டது. பயனாளிகளுக்கு இதுகுறித்த குறுஞ்செய்தியும் அனுப்பப்பட்டது. வங்கிகளும் அந்த தொகை வைப்பு செய்யப்பட்டதற்கான குறுஞ்செய்திகளை பயனாளிகளுக்கு அனுப்பின. அறிவித்த நாளுக்கு முன்பாகவே ரூ.1,000 வந்து சேர்ந்ததால் பெண்கள் பெரிதும் மகிழ்ச்சி அடைந்தனர்.

வங்கிக் கணக்கு இல்லாதவர்களுக்கு கூட்டுறவு வங்கிகளில் கணக்கு தொடங்கப்பட்டுள்ளது. அரசு முத்திரை, திட்டத்தின் பெயர், வங்கி பெயர், பயனாளி பெயர் உள்ளிட்ட விவரங்களுடன் பிரத்யேகமாக ஏடிஎம் அட்டையும் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த அட்டையையும் பயனாளிகளுக்கு முதல்வர் இன்று வழங்குகிறார். தொடர்ந்து, மற்ற மாவட்டங்களிலும் இதை பயனாளிகளுக்கு அந்தந்த மாவட்ட அமைச்சர்கள் வழங்குகின்றனர்.

# யானைகளின் சூப்பர் ஸ்டார் செங்களூர் ரங்கநாதன்

## ஆசியாவின் மிக உயரமான யானையின் உருக்கமான கதை!

திருச்சியில் இருந்து திருச்சூர் சென்று உலகின் கவனத்தை ஈர்த்த ஆசியாவின் மிக உயரமான யானையான செங்களூர் ரங்கநாதனின் பிரமாண்ட எலும்புக்கூடு, திருச்சூர் அருங்காட்சியகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது.

காட்டு யானைகளை பிடித்து வளர்ப்பு யானைகளாக மாற்றி, மனிதர்களின் தேவைகளுக்கு பயன்படுத்துவது என்பது பல நூற்றாண்டுகளாக இருந்து வருகிறது. மன்னர்கள் காலத்தில் போர் களத்தில் சண்டையிட்ட வளர்ப்பு யானைகள், தற்போது கிராமங்களுக்குள் புகுந்த காட்டு யானைகளுடன் சண்டையிட்டு விரட்டவும், பிடிக்கவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அதேசமயம் அந்த காலம் முதல் இந்த காலம் வரை வளர்ப்பு யானைகளின் கோவில் விழாக்களில் முக்கிய அங்கமாக இருப்பது மட்டும் மாறவில்லை. அப்படி நூறாண்டுகளுக்கு முன்பு அப்போதைய மெட்ராஸ் மாகாணத்தில் ஒரு கோவிலில் வளர்ந்த ஒரு யானை, ஆசியாவின் மிகப்பெரிய யானை என்ற பெருமையோடு இன்றளவும் ஆச்சரியத்தை ஏற்படுத்தி வருகிறது.

செங்களூர் ரங்கநாதன் என்ற அந்த யானையின் பெயர் இன்றளவும் பிரபலம். ஏன் தெரியுமா? அந்த கால யானைகளின் சூப்பர் ஸ்டார் செங்களூர் ரங்கநாதன் என்பதே அதற்கு காரணம். திருச்சியில் இருந்து திருச்சூர் சென்று உலகின் கவனத்தை ஈர்த்த ஆசியாவின் மிக உயரமான யானையான செங்களூர் ரங்கநாதனின் பிரமாண்ட எலும்புக்கூடு, திருச்சூர் அருங்காட்சியகத்தில் பராமரிக்கப்பட்டு வருகிறது. என்ன காரணம் தெரியுமா?

#### காவிரி ஆற்றங்கரையில் ரங்கநாதன்

திருச்சி அருகே காவிரி ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஸ்ரீ ரங்கம் ரங்கநாதர் கோவிலுக்கு,



பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக்கால கட்டத்தில் ஒரு குட்டி யானை வந்து சேர்கிறது. அந்த குட்டி யானைக்கு ரங்கநாதர் சாமியை குறிப்பிடும் வகையில், ரங்கநாதன் என பெயர் சூட்டப்பட்டது. தினமும் காவிரி ஆற்றில் இருந்து தண்ணீர் கோவிலுக்குள் எடுத்து வர ரங்கநாதனுக்கு பழக்கப்படுத்தப்பட்டது. இதன்படி காவிரி ஆற்றில் இருந்து ரங்கநாதன் எடுத்து வரும் கலச நீரில் தான் ரங்கநாத சாமிக்கு அபிஷேகம் செய்யப்பட்டது. ரங்கநாதன் வளர வளர பிரச்சனைகள் வர ஆரம்பித்தது. அசாத்தியமான வகையில் உயரமாக ரங்கநாதன் வளர்ந்தது. இதனால் கோயிலின் உள் வா யில்கள் வழியாகச் கோயிலுக்குள் ரங்கநாதனால்




நுழைய முடியவில்லை. இருப்பினும் பகான்களின் வற்புறுத்தலால் சிரமப்பட்டு கோவிலுக்குள் சென்ற யானையின் உடலெங்கும் காயங்கள் ஏற்பட்டன. ஒரு கட்டத்தில் ரங்கநாதனால் கோவிலுக்குள் நுழைய முடியாத உயரத்தையும், கம்பீரமான தோற்றத்தையும் அடைந்த போது, கோவில் நிர்வாகத்தினர் என்ன செய்வது எனத் தெரியாமல் தவித்தனர்.

பல கட்ட யோசனைகளுக்கு பிறகு ரங்கநாதனை விற்பனை செய்து விடலாம் என கோவில் நிர்வாகத்தினர் முடிவு செய்தனர். அதைத்தவிர அவர்களுக்கு வேறு வழி தெரியவில்லை. 1905ம் ஆண்டில் ஒரு ஆங்கில நாளிதழில் 'யானை விற்பனைக்கு' என விளம்பரம் அளிக்கப்பட்டது. இதனைப் பார்த்து திருச்சூரில் உள்ள செங்களூரை சேர்ந்த பரமேசுவரன் நம்பூதிரி என்பவர் 1,500 ரூபாய்க்கு ரங்கநாதனை விலைக்கு வாங்கினார்.

**திருச்சூர் பூரத்தில் ரங்கநாதன்**

செங்களூர் சென்ற ரங்கநாதனுக்கு மருத்துவ சிகிச்சை அளித்து பராமரிக்கப்பட்டது. இதில் உடல் நலம் தேறிய ரங்கநாதனின் கம்பீரமான தோற்றத்துடன், உடல் பொலிவும் சேர்ந்தது. 1906ம் ஆண்டு நடந்த, திருச்சூர் ஆடிப்பூரம் திருவிழாவிற்கு ரங்கநாதனைக் அழைத்து வந்து நிறுத்தினார், பரமேசுவரன் நம்பூதிரி. அழகிய பரந்த நெற்றி, நிலத்தை தொடும் தும்பிக்கை, நீண்ட மினுங்கும் தந்தங்கள் அசாத்தியமான உயரம், கம்பீரமான தோற்றத்துடன் இருந்த ரங்கநாதனைப் பார்த்து பொதுமக்கள் ஆச்சரியப்பட்டனர். ஏனெனில் 11 அடி 4 அங்குல உயரத்துடன் கம்பீரமாக இருந்த ரங்கநாதனின் முன்பு மற்ற யானைகள் எல்லாம் குழந்தைகள் போல தெரிந்தன. அதன் பிரமாண்ட உருவத்தை பார்த்த மக்கள் ரங்கநாதனை கொண்டாடினர். மக்களின் மனங்களை கவர்ந்த ரங்கநாதன்

# மாட்டின் உடலில் விஷம் தடவி 2 புலிகள் கொலை..

## பழிவாங்கிய உரிமையாளர் கைது!

நீலகிரி மாவட்டத்தில் 60 சதவீதத்திற்கு மேல் வனப்பகுதியாக உள்ளது. இதனால் இந்த வனப்பகுதிகளில் புலிகளின் எண்ணிக்கையும் அதிகமாக காணப்படுகிறது. குறிப்பாக முக்குருத்தி, போர்த்திமந்து, அவலாஞ்சி மற்றும் எமரால்டு வன பகுதிகளில் மரபணு குறைபாடு காரணமாக பிறந்துள்ள இரண்டு வெள்ளை புலிகள் உள்பட 10-க்கும் மேற்பட்ட புலிகள் உள்ளன.

இந்த நிலையில் எமரால்டு அருகே அவலாஞ்சி அணையின் கரையில் கடந்த சில தினங்களுக்கு முன்பு இரண்டு புலிகள் இறந்து கிடப்பதை பொதுமக்கள் பார்த்து உதகை தெற்கு வனத்துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். தகவல் அறிந்து நீலகிரி வன கோட்ட வன அலுவலர் கௌதம் தலைமையில் உதகை தெற்கு வனச்சரக வனத்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று அணையில் தண்ணீரில் இறந்து கிடந்த புலியையும், அங்கிருந்து சுமார் 50 மீட்டர் தூரத்தில் இறந்து கிடந்த மற்றொரு புலியையும் மீட்டு பிரேத பரிசோதனை செய்தனர். புலிகள் விஷம் வைத்து கொல்லப்பட்டிருக்கலாம் என சந்தேகித்த வனத்துறையினர் மோப்பநாய் உதவியுடன் பல குழுக்களாக பிரிந்து விசாரணை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் புலிகள் இறந்த இடத்திற்கு அருகாமையில் மாடு ஒன்று இறந்திருந்தது. மாட்டின் மீது விஷம் தடவப்பட்டு அதன் மாமிசத்தை புலிகள் சாப்பிட்டிருக்கலாம் என வனத்துறையினர் சந்தேகித்தனர். இதனையடுத்து அருகாமையில் உள்ள





கிராமத்தில் யாருடைய மாடாவது காணாமல் போய் உள்ளதா என விசாரணை மேற்கொண்டனர். அப்போது அதே பகுதியைச் சேர்ந்த சேகர் என்பவருடைய மாடு காணாமல் போனது உறுதி செய்த வனத்துறையினர் சேகரை பிடித்து விசாரணை செய்தனர்.

விசாரணையில் தனது மாட்டை வனவிலங்கு தாக்கியதில் மாடு இறந்ததை பார்த்து ஆத்திரம் அடைந்து இறந்த மாட்டின் மீது பூச்சி கொல்லி மருந்தை தடவியதாக குற்றத்தை ஒப்புக்கொண்டார். இதனால் சேகரை கைது செய்த வனத்துறையினர் நீதிமன்றத்தில் ஆச்சரியப்படுத்தி சிறையில் அடைத்தனர்.

# ஆரோக்கியத்திற்கு உதவும், உண்ணக்கூடிய மலர் வகைகள் ஐந்து

மலர்கள், நீண்ட காலமாக அவற்றின் அழகு மற்றும் வாசனைக்காக மதிக்கப்படுகின்றன. அழகாக இருப்பதை தாண்டி, இந்த சிறிய பூக்கள், உங்கள் உணவில் புதிய சுவைகள் மற்றும் ஊட்டச்சத்துகளை அதிகரிக்கும்.

ஆம், இயற்கை எழில் கொஞ்சும் சில பூக்கள், நம் உணவில் சேர்த்துக்கொள்ள கூடியவை என ஆயுர்வேத நூல்கள் குறிப்பிடுகின்றன. அப்படி நம் இந்தியாவில் கிடைக்கும் சில உண்ணக்கூடிய பூக்களின் பட்டியல் இதோ:

**செம்பருத்தி மற்றும் தாமரை**: ஆழமான சிவந்த நிறமுடைய செம்பருத்தி மலர்கள், பொதுவாக தேநீர் தயாரிக்கப் பயன்படுகின்றன. உலர்ந்த பூக்களின் பாகங்கள், குறிப்பாக காளிக்ஸ் (பூவின் உறை) பாரம்பரிய செம்பருத்தி தேநீர் தயாரிக்கப் பயன்படுகிறது.

அந்தோசயினின்கள் மற்றும் பாலிசாக்கரைடுகள் இருப்பதால், செம்பருத்தியானது, இரத்த அழுத்தம் மற்றும் கொலஸ்ட்ரால் அளவை திறம்பட மேம்படுத்தும் என்று ஆராய்ச்சி சுட்டிக்காட்டுகிறது. மேலும் இது ஆக்ஸிஜனேற்றத்தின் ஆதாரமாக அமைகிறது.

**தாமரை:** ஆசிய நாடுகளில் பன்னெடுங்காலமாக இந்த தாமரை மலர்கள் உணவாக பயன்படுத்தப்பட்டுள்ளன. தேநீர், மூலிகை மருந்துகள் என இதன் பயன்பாடு ஏராளம். தாமரை தண்டு, இதழ், மற்றும் விதை என தாமரை மலரின் அனைத்து பாகங்களும் தற்போது உணவாக மாறியுள்ளது. தாமரை இதழ்களில் வைட்டமின் ஏ, பி மற்றும் சி நிறைந்துள்ளன.

ரோஜா: நறுமணம் மற்றும் இனிப்பு சுவைக்காக அறியப்பட்ட ரோஜாவை பல்வேறு வகைகளில் உண்ணலாம். பல்வேறு பானங்கள், பழங்கள் மற்றும் காய்கறிகளுடன் கலந்து சுவைக்கலாம். ஆனால் அனைத்து ரோஜாக்களும் உண்ணக்கூடியவை அல்ல. உண்ணக்கூடிய ரோஜா இதழ்கள், ஒரு இனிமையான வாசனை மற்றும் சுவையை வழங்குகின்றன. அவை உங்களுக்கு வலி நிவாரணத்தையும் வழங்கக்கூடியது.



அதோடு, ரோஜா இதழ்களை வடிகட்டுவதன் மூலம் பெறப்பட்ட ரோஸ் வாட்டர், அதன் அழற்சி எதிர்ப்பு பண்புகளுக்காக பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்படுகிறது.

குல்கந்து எனப்படும் பிரபலமான பொருள், காய்ந்த ரோஜா இதழ்களுடன் தேன் கலந்து தயாரிக்கப்படுகிறது.

**வேப்பம் பூ:** வேப்பம் பூ ரசம் கேள்விப்பட்டிருப்பீர்கள். கோடையில் மட்டுமே பூக்ககூடிய வேப்பம் பூக்களை, நமது முன்னோர்கள் சேகரித்து, பதப்படுத்தி, அதை வருடம் முழுவதும் உபயோகித்தனர். அத்தனை மருத்துவ குணம் நிறைந்தது இந்த வேப்பம் பூ. இயற்கையான கிருமி நாசினியாக அறியப்படும் இந்த வேப்பம் பூ, குடல் பிரச்சனைகள், வயிற்று பிரச்சனைகள், பித்தம் போன்ற பலவற்றிற்கும் மருந்தாக பயன்படும். சரும வியாதிக்கு மருந்தாக இதை எடுத்துக்கொள்ளலாம்.

**பரங்கி பூ:** பூசணிக்காய் வகையை சேர்ந்த பரங்கிக்காய் பூக்கள், நாம் உணவில் பயன்படுத்தக்கூடிய குணாதிசயம் உடைய மலராகும். இந்த பூக்கள் பெரும்பாலும் இத்தாலிய மற்றும் மெக்ஸிகன் உணவு வகைகளான பாஸ்தா மற்றும் சூப்களில் அதிக பயன்படுத்தப்படும்.

ஆனால் நம் நாட்டில் இதை மற்ற காய்கறிகளுடன் சேர்க்கப்பட்டு சமைக்கப்படுகிறது. இந்த பூவில வைட்டமின் சி மற்றும் பொட்டாசியம் போன்ற ஊட்டச்சத்துக்கள் நிரம்பியுள்ளன.

# உலகையே மிரளச் செய்த ஜி-20 உச்சி மாநாடு! உலகின் குருவாய் உருவெடுக்கும் பாரதம்!




பாரதத்தின் தலைநகர் புதுதில்லியில் ஜி-20 நாடுகள் கூட்டமைப்பின் 18-வது உச்சி மாநாடு வெற்றிகரமாக நடந்து முடிந்திருக்கிறது. இந்த மாநாட்டின் பிரமாண்டம் ஜி-20 கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் அமெரிக்கா, சீனா, ரஷ்யா, இங்கிலாந்து, ஜெர்மனி உள்ளிட்ட நாடுகள் மிரண்டு போயியுள்ளன. அந்த அளவுக்கு ஜி-20 நாடுகளின் தலைவர்கள், அவர்களின் பிரதிநி திகளை தில்லி விமான நிலையத்தில் வரவேற்றது முதல், தங்குமிடம், போக்குவரத்து, உணவு என அனைத்திலும் அசத்தியிருக்கிறார் பிரதமர் நரேந்திர மோடி.

தில்லி பிரகதி மைதானத்தில் புதியதாக கட்டப்பட்டுள்ள பாரத் மண்டபத்தில் தான் ஜி-20 உச்சி மாநாடு நடைபெற்றது.

ஜி-20 என்பது உலக மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கைக் கொண்ட 20 நாடுகளின் குழுவாகும். ஜி-20 இலச்சினை என்பது வெறும் இலச்சினை அல்ல. இது ஒரு செய்தி, இந்தியாவின் நரம்புகளில் ஓடும் உணர்வு. 'வாசுதைவ குடும்பகம்' - 'உலகமே ஒரே குடும்பம்' என்பது நம் எண்ணங்களில் என்றும் நிறைந்திருக்கும் ஒரு தீர்மானம். உலகளாவிய சகோதரத்துவத்தின் சிந்தனை ஜி-20 இலச்சினை மூலம் பிரதிபலிக்கிறது.

'வாசுதைவ குடும்பகம் - ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம்' என்பதுதான் ஜி-20 மாநாட்டின் கருப்பொருள். இது ஒட்டுமொத்த உலகமும் ஒரே குடும்பம் என்ற உலகளாவிய பார்வையை வெளிப்படுத்துகிறது.

ஜி20 நாடுகள் கூட்டமைப்பில் பாரதம், அமெரிக்கா, சீனா, ரஷ்யா, கனடா, ஜப்பான், இங்கிலாந்து, ஜெர்மனி, பிரான்ஸ், ஆஸ்திரேலியா, பிரேசில், சவுதி அரேபியா, தென் ஆப்பிரிக்கா, தென் கொரியா, இத்தாலி, இந்தோனேசியா, அர்ஜென்டினா, துருக்கி, மெக்சிகோ, ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகள் உள்ளன. இப்போது புதியதாக ஆப்பிரிக்க யூனியனும் இணைந்துள்ளது.

உலகின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு பங்கு இந்த 21 நாடுகளில் உள்ளன. உலகின் மொத்த உற்பத்தியில் 85 சதவீதம், உலகின் மொத்த வணிகத்தில் 80 சதவீதம் இந்த 21 நாடுகளில் தான் நடக்கின்றன. சர்வதேச அளவில் உள்ள பல்வேறு கூட்டமைப்புகளில்

முதன்மையானது ஜி-20 கூட்டமைப்புதான். எனவே தான், ஜி-20 மாநாட்டில் என்ன முடிவு எடுக்கப் போகிறது என்பதை உலகமே உற்று நோக்கியது.

ஜி-20 நாடுகள் கூட்டமைப்பிற்கு தலைமை ஏற்ற பாரதம், மாநாட்டை உலகமே வியக்கும் அளவுக்கு நடத்தி முடித்திருக்கிறது. மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, இங்கிலாந்து பிரதமர் ரிஷி சுனக், பங்களாதேஷ் பிரதமர் ஷேக் ஹசீனா, இத்தாலி பிரதமர் ஜார்ஜியா மெலோனி, அர்ஜென்டினா அதிபர் ஆல்பர்ட்டோ பெர்னாண்டஸ், ஜப்பான் பிரதமர் கிஷிடோ உள்ளிட்ட உலகத் தலைவர்கள் வருகை தந்தனர்.

தில்லியில் நடந்த ஜி20 மாநாட்டில் பல்வேறு சாதனைகள் நிகழ்த்தப்பட்டன. ரஷ்யா - உக்ரான் போர் காரணமாக, ஒருமித்த கூட்டுத் தீர்மானம் நிறைவேற்றுவது நடக்க வாய்ப்பே இல்லை என, சர்வதேச ஊடகங்கள் எழுதி வந்தன. ஆனால், அனைவரது கணிப்புகளையும் பொய்யாக்கி மாநாட்டின் முதல் நாளிலேயே கூட்டுத் தீர்மானத்தை நிறைவேற்றினார் பிரதமர் நரேந்திர மோடி.

காலநிலை சவால்களை எதிர்கொள்ளப் போராடும் வளரும் நாடுகளுக்கு நிதி கிடைக்க உலகளாவிய நிதி நிறுவனங்களைச் சீர்திருத்துவது, கடனை மறுகட்டமைப்பு செய்வது, உலகளாவிய உணவு மற்றும் எரிசக்தி பாதுகாப்பு தொடர்பாக யுக்ரேனில் போரால் ஏற்பட்டுள்ள துன்பங்கள் மற்றும் எதிர்மறையான தாக்கங்கள் பற்றி கூட்டுத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தன.

ஆப்பிரிக்க ஒன்றியம் ஜி-20 கூட்டமைப்பின் நிரந்தர உறுப்பினராக சேர்க்கப்பட்டது, இந்தியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய யூனியனுக்கான பொருளாதார வழித்தட ஒப்பந்தம், உலகளாவிய உயரிய எரிபொருள் கூட்டணி எனப் பல சிறப்பம்சங்கள் தில்லி மாநாட்டில் உறுதி செய்யப்பட்டன.

இந்தியா, மத்திய கிழக்கு மற்றும் ஐரோப்பிய யூனியனுக்கான பொருளாதார வழித்தட ஒப்பந்தத்தின்படி, இரண்டு வழித்தடங்கள் அமைக்கப்படும். அதில் கிழக்கு வழித்தடம் இந்தியாவை மேற்கு ஆசியாவுடனும் மத்திய கிழக்கு நாடுகளுடனும் இணைக்கும். வடக்கு வழித்தடம், மேற்கு ஆசியா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளை ஐரோப்பாவுடன் இணைக்கும்.

இந்த பொருளாதார வழித்தடத் திட்டத்தில் இந்தியா, ஐக்கிய அரபு எமிரேட்ஸ், சவுதி அரேபியா, ஜோர்டான், இஸ்ரேல், ஐரோப்பிய யூனியன் ஆகியவை ரயில் மற்றும் கப்பல் வாயிலாக இணைக்கப்படும். இதன்மூலம் இந்தியா, மேற்கு ஆசியா, ஐரோப்பாவுக்கு இடையே பொருளாதார ஒருமைப்பாடு ஏற்படும்.

இது பாரதப் பிரதமர் நரேந்திர மோடியின் மகத்தான சாதனை, ராஜதந்திர நகர்வு என்றும், சீனாவின் பிரமாண்ட பொருளாதார வழித்தடத் திட்டத்திற்கு பதிலடியாக இருக்கும் என சர்வதேச ஊடகங்கள் செய்திகள் வெளியிட்டு வருகின்றன. உலகின் பெரிய பரப்பை ஒன்றாக இணைக்கவும், டிஜிட்டல் இணைப்பை மேம்படுத்தவும், ஹைட்ரஜன் எரிவாயு போன்ற ஆற்றல் உற்பத்தி உட்பட உலக நாடுகளிடையே வர்த்தகத்தை அதிகரிக்கவும் இந்தத் திட்டம் உதவும் என்று உலகமே இதை பாராட்டி வருகிறது.

உலகம் இன்று எதிர்கொள்ளும் காலநிலை மாற்றம், அதனால் ஏற்படும் அதிக வெப்பம், அதிக மழை என இயற்கை சீற்றங்களை எதிர்கொள்வதற்கான செயல்திட்டங்கள் குறித்து ஜி-20 உச்சி மாநாட்டில் விரிவாக விவாதிக்கப்பட்டு பல்வேறு முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது. கடந்த டிசம்பரில் இருந்து இந்தியாவின் 50-க்கும் அதிகமான நகரங்களில் நடந்த பல்வேறு துறைகளின் கூட்டங்களில் உலக நாடுகளின் தலைவர்கள், நிபுணர்களுடன் விரிவாக, ஆழமாக விவாதித்து எடுக்கப்பட்ட முடிவுகள், தில்லி உச்சி மாநாட்டில் செயல் திட்டங்களாக, வழிகாட்டுதல்களாக, கூட்டுத் தீர்மானமாக வெளிப்பட்டுள்ளன.

டிஜிட்டல் மயமாக்கலில் இந்தியாவின் சாதனைகள் குறிப்பாக டிஜிட்டல் பண பரிமாற்றம், அனைத்திலும் இணையத்தை பயன்படுத்துதல் உலகமே மிரளச் செய்துள்ளது. ஜி-20 தில்லி உச்சி மாநாட்டின் வெற்றிக்கு பிரதமர் நரேந்திர மோடியின் கடும் உழைப்பும், தீர்க்க தரிசனும், அறிவாற்றலும் தான் காரணம். அதை உலகத் தலைவர்கள் மனம் திறந்து பாராட்டியுள்ளனர். ஜி-20 உச்சி மாநாட்டின் பெரும் வெற்றி, நம் பாரதம் உலகின் குருவாய் உருவெடுத்து வருவதை பறை சாற்றியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# பாட்டாளி மக்கள் கட்சியின் முதுகெலும்பே அதன் இளைஞர்கள்தான்!



கடலூர், பாட்டாளி மக்கள் கட்சியின் முதுகெலும்பே அதன் இளைஞர்களும் மற்றும் கடலூர் மாவட்டமும் தான் என்று பாட்டாளி மக்கள் கட்சி தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் பங்கேற்ற களப்பணியாளர்கள் கலந்துரையாடல் கூட்டத்தில் தெளிவுபடுத்தினார்.

பாட்டாளி மக்கள் கட்சி கடலூர் (வடக்கு) மாவட்டம் சார்பில், கடலூர் நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட நெய்வேலி, பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிகளுக்கான வாக்குச்சாவடி களப்பணியாளர்கள் கலந்துரையாடல் கூட்டம் (16.09.2023) கடலூர் மாவட்டம், காடாம்புலியூரில், மாவட்ட செயலாளர் கோ. ஜெகன் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டம், மாநில வன்னியர் சங்கத் தலைவர் பு.தா.அருள்மொழி, மாநில சொத்து பாதுகாப்புக்குழு தலைவர் டாக்டர்.கோவிந்தசாமி, மாநில வன்னியர் சங்க செயலாளரும், கடலூர் எம்.பி., தொகுதி பொறுப்பாளருமான தங்க. அய்யாசாமி, மாநில அமைப்பு தலைவர் பழ.தாமரைக்கண்ணன், மாநில மாணவரணி சங்கத் தலைவர் கோபிநாத், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் வேங்கை சேகர், சக்திவேல், அமைப்புச் செயலாளர் கயல்ராஜன், முன்னாள் நிர்வாகிகளான சிறப்பு மாவட்ட செயலாளர் ரவிச்சந்திரன், மாவட்ட செயலாளர்கள் நெடுஞ் செழியன், ரவிச்சந்திரன், மகளிரணி சிவகாமி, சுசீலா, விஜயபார்வதி, சுஜாதா ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த கலந்துரையாடல் கூட்டத்திற்கு சிறப்பு அழைப்பாளராக பங்கேற்று பாட்டாளி மகன் கட்சி தலைவர் மருத்துவர் அன்புமணி ராமதாஸ் பேசிய பின்னர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

“பாட்டாளி மக்கள் கட்சியின் கோட்டையே கடலூர் மாவட்டம் தான். நாடாளுமன்றத்

தேர்தலுக்கு இன்னும் 5 மாதங்களேயுள்ளது. இந்தத் தேர்தலில் மிகப்பெரிய வெற்றிபெற பட்டாளி மக்கள் கட்சியினர் அதற்கான பணிகளை தொடங்க வேண்டும். அதற்காகவே, நெய்வேலி, பண்ருட்டி சட்டமன்றத் தொகுதிகள் கலந்தாய்வு கூட்டம் நடைபெறுகிறது.

பாட்டாளி மக்கள் கட்சி ஒரு வித்தியாசமான கட்சி. மேலும் இளைஞர்கள் அதிகமுள்ள கட்சியாகும். ஏனைய கட்சிகளில் இளைஞர்கள் அதிக அளவில் இல்லை. அதுவே நமக்கு பெருமையாக உள்ளது. தமிழகத்தில் எங்கு சென்றாலும் கோடிக்கணக்கான தம்பிகளும், தங்கைகளும் உள்ளனர். நான் ரொம்ப கொடுத்து வைத்தவன். எனக்கு கிடைத்த தம்பிகள், தங்கைகள் போன்று தமிழகத்தில் எந்த தலைவருக்கும் கிடையாது. அவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல. ஆற்றல்மிக்க, வீரமிக்க, விவேகமிக்க, திறமையானவர்களே.

பாட்டாளி மக்கள் கட்சியின் முக்கிய இலக்கே வரும் 2026லுால் தமிழகத்தில் பாட்டாளி மக்கள் கட்சி ஆட்சியே நடைபெறும். அது உறுதி. அதற்கு முன்னோட்டம் தான் 2024 ல் நடக்கும் நாடாளுமன்ற தேர்தல்.

தமிழக மக்கள் மனநிலை மாறி வருகிறது. 56 ஆண்டுகாலங்கள் இரு கட்சிகள் ஆட்சி செய்தது போதும் என்ற மனநிலைக்கு மக்கள் வந்துள்ளனர். குறிப்பாக பெண்கள் வந்து விட்டார்கள். தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டத்திற்கும் சென்று வருகிறேன். தென் மாவட்டங்களில் மதுரை, தேனி, திருநெல்வேலி, தூத்துக்குடி, திண்டுக்கல், மேற்கு பகுதி கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு ஆகிய பகுதிகளுக்கு சென்றாலும், அங்குள்ள மக்கள் இந்த 2 கட்சிகளுக்கும் அளித்த வாய்ப்பு போதும்.

இனி தமிழ்நாட்டில் நம் அன்புமணிக்கு ஒரு வாய்ப்பு கொடுப்போம் என்ற ஒரு நம்பிக்கை மக்கள் மனதில் ஆழமாக உள்ளது. அங்கேயே அந்த நிலைமைன்னா, நம்ம பகுதி எப்படி இருக்கும்னு நினைச்சு பாருங்க.

அதை உறுதி செய்யும் வகையில், வருகின்ற நாடாளுமன்றத் தேர்தலில் நாம் வெற்றி பெற்றாக வேண்டும். அதற்கு அனைத்து செயல்வீரர்களும், களத்தில் இறங்கி பணியாற்ற வேண்டும்.

நீங்க இறங்கினா போதும். ஒரு வாக்குச்சாவடியில் சராசரியாக 900 முதல் 1100, அதிகபட்சம் 1200 வாக்குகள் இருக்கும். 250 குடும்பங்கள் இருக்கும். அதை களப்பணியாளர்கள் 20 அல்லது 30 வீடுகளில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் சென்று, எந்த கட்சி, ஜாதி, மதம், இனம் இருந்தாலும், எங்க அண்ணன் அன்புமணி அனுப்பி வச்சாரு, உங்கள பார்த்துட்டு வரச் சொன்னாருன்னு மட்டும் சொல்லுங்க, திரும்பவும் அடுத்த வாரம் செல்லுங்கள். மக்களின் மனநிலை மாறியிருக்கும்.

இந்த மாவட்டத்திற்காக பாட்டாளி மக்கள் கட்சி எத்தனையோ போராட்டங்களை நடத்தியுள்ளது. இந்த மாவட்டத்தின் முதன்மை பிரச்சினை என்.எல்.சி, இங்கு நிலத்தடி நீர் ஆயிரத்து 200 அடிக்கு கீழ் போய்விட்டது. என்.எல்.சி மின்சாரம் இனி நமக்கு வேண்டாம். 800 மெகாவாட் மின்சாரத்திற்காக இப்பகுதியை சீரழித்துவிட்டது. இப்பகுதி மக்கள் அடையாளத்தை மாற்றி அகதிகளாக மாற்றி விட்டது. முந்திரி விலை வீழ்ச்சி அடைந்ததற்கு காரணமே தற்போதைய கடலூர் திமுக நாடாளுமன்ற உறுப்பினர்தான்.

அவர் மடகாஸ்கரில் இருந்து முந்திரியை இறக்குமதி செய்கிறார். இங்குள்ள மக்களை பாதுகாப்பது பாட்டாளி மக்கள் கட்சி தான். மற்ற கட்சிகள் அடையாளத்திற்கும், சந்தர்ப்பத்திற்கும் அரசியல் பண்ணக்கூடியது. தமிழகத்தில் பெண்கள் வாக்குதான் அதிகம். அவர்களின் மனநிலையில் மாற்றம் வந்துள்ளது. கடலூர் நாடாளுமன்ற தொகுதியில் பாட்டாளி மக்கள் கட்சியே வெல்லும். 50 ஆண்டு ஆட்சி செய்த இரு கட்சிகளும் போதும் என்ற நிலைக்கு வந்துள்ளனர். 2016 ஆம் ஆண்டு மாற்றம், முன்னேற்றம், அன்புமணி என்பது மக்களிடையே வெற்றி பெறுவது உறுதி.'' என பேசினார்.

# இந்திய இளைஞர்களுக்குப் பல புதிய வாய்ப்புகள் திறமைக்கு ஏற்ப வாழ்வாதாரங்களை வழங்குகின்றன;

## மத்திய அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங்

புதுதில்லியில் நடைபெற்ற கேஏளம்பி பிரதிபா உத்சவ் -2023 இல் உரையாற்றிய மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் (தனிப்பொறுப்பு) பிரதமர் அலுவலகம், பணியாளர், பொதுமக்கள் குறைகள், ஓய்வூதியம், அணுசக்தி மற்றும் விண்வெளித் துறை இணை அமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங், சந்திரயான் -3 வெற்றிகரமாக ஏவப்பட்டது இந்திய மாணவர்களிடையே உலகளாவிய விருப்பங்களை தூண்டியுள்ளது என்று கூறினார். சந்திரயான் -3 ஐத் தொடர்ந்து ஆதித்யா எல் 1, சூரியனை ஆய்வு செய்வதற்கான முதல் விண்வெளி அடிப்படையிலான இந்தியாவின் திட்டமாகும். இன்னும் சில நாட்களில் இந்தியா டெல்லியில் வரலாற்று சிறப்புமிக்க ஜி 20 உச்சி மாநாட்டை நடத்துகிறது, இவை அனைத்திற்கும் பெருமை நமது தொலைநோக்குப் பார்வை கொண்ட பிரதமர் திரு நரேந்திர மோடியையே சாரும் என்றும் கூறினார்.

“இந்தியாவில் மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்குப் புதிய தொழில் மற்றும் தொழில்முனைவோர் வாய்ப்புகளைத் திறப்பதற்கான வாக்குறுதியுடன் ஸ்டார்ட்அப் சுற்றுச்சூழல் அமைப்புக்கு துணைபுரியும் புதிய தேசியக் கல்விக் கொள்கையையும் (என்இபி -2020) பிரதமர் மோடி கொண்டு வந்தார்,” என்றும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

மேலும் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறுகையில், இந்த கல்வி நெகிழ்வுத்தன்மை மாணவர்களின் உள்ளார்ந்த கற்றல் மற்றும் உள்ளார்ந்த திறனைப் பொறுத்து வெவ்வேறு நேரங்களில் வெவ்வேறு தொழில் வாய்ப்புகளைப் பெறுவது தொடர்பான நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதால், மல்டிபிள் என்ட்ரி / எக்ஸிட் விருப்பத்தை வழங்குவது மதிக்கப்பட வேண்டிய ஒன்றாகும். இந்த நுழைவு / வெளியேறும் விருப்பத்தை எதிர்காலத்தில் ஆசிரியர்களுக்கும்



தேர்வு செய்யலாம் என்றும், இது சில மேற்கத்திய நாடுகள் மற்றும் அமெரிக்காவைப் போலவே அவர்களுக்கு தொழில் நெகிழ்வுத்தன்மை மற்றும் மேம்பாட்டிற்கான வாய்ப்புகளை வழங்குகிறது என்றும் அமைச்சர் கூறினார்.

மோடியின் 9 ஆண்டுகால ஆட்சியைக் குறிப்பிட்ட டாக்டர் ஜிதேந்திர சிங், முறையான வேலைகளைத் தவிர, ஸ்டார்ட் அப்கள், முத்ரா திட்டம், பிரதமர் ஸ்வநிதி என நாட்டின் இளைஞர்களுக்கு அரசாங்கத் துறைக்கு வெளியே லட்சக்கணக்கான வாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளன என்று சுட்டிக்காட்டினார்.

ஜூன் 2020 இல் பிரதமர் திரு நரேந்திர மோடியின் முயற்சியால் விண்வெளி ஸ்டார்ட்அப்களின் எண்ணிக்கை வெறும் 04 என்பதில் இருந்து 150 ஸ்டார்ட்அப்களாக உயர்ந்துள்ளது, அவற்றில் பெரும்பாலானவை அறிவியல் மாணவர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் தொழில்முனைவோர்களால் வழிநடத்தப்படுகின்றன என்று டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

சி.எஸ்.ஐ.ஆர்-என்.ஐ.எஸ்.சி.பி.ஆரின் ஒரு வாரம் ஒரு ஆய்வகத் திட்டம் 2023 செப்டம்பர் 11 முதல் 16 வரை இயங்கும், அப்போது சி.எஸ்.ஐ.ஆர்-என்.ஐ.எஸ்.சி.பி.ஆர் அமைப்புகளை பொதுமக்கள் பார்வையிடலாம்.

# நாடு முழுவதும் தேசிய ஊட்டச்சத்து மாதம் 2023-ன் முதல் நாளில் சுமார் 10 லட்சம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன

மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம் செப்டம்பர் 2023 முழுவதும் 6-வது தேசிய ஊட்டச்சத்து மாதமாக கொண்டாடப்படுகிறது. தேசிய ஊட்டச்சத்து மாதம் 2023-ன் முதல் நாளில் நாடு முழுவதும் சுமார் 10 லட்சம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

ஊட்டச்சத்து இந்தியாவையொட்டிய இந்த மக்கள் இயக்கத்தில் ஒவ்வொரு குடிமகனும் பங்கேற்க வேண்டியது அவசியமாகும்.

தேசிய ஊட்டச்சத்து மாதம் 2023-ன் தொடக்க விழாவில், நாடு முழுவதிலுமிருந்து அதிகாரிகள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்கள் உணவு பன்முகத்தன்மையை ஊக்குவிக்கவும், ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும் ஒருங்கிணைந்தனர். இதற்காக அவர்கள் உறுதி மொழி ஏற்றுக்கொண்டனர்.

இந்த ஆண்டு, தேசிய ஊட்டச்சத்து மாதம் 2023-ன் நோக்கம், வாழ்க்கை சுழற்சி அணுகுமுறை மூலம் ஊட்டச்சத்து குறைபாட்டை முழுமையாக சமாளிப்பதாகும். ஊட்டச்சத்து மாதம் 2023-ன் முக்கியமான விழிப்புணர்வு ஏற்படுத்தக்கூடிய மனித வாழ்க்கை நிலைகள்: கர்ப்பம், பச்சிளங்குழந்தை பருவம், குழந்தை பருவம் மற்றும் இளமை பருவம். “சுபோஷித் பாரத், சாக்ஷர் பாரத், சஷக்த் பாரத்” (ஊட்டச்சத்து நிறைந்த இந்தியா, படித்த இந்தியா,




அதிகாரமளிக்கப்பட்ட இந்தியா) என்ற கருப்பொருளை மையமாகக் கொண்ட கருப்பொருளின் மூலம் இந்தியா முழுவதும் ஊட்டச்சத்து புரிதலை வளர்ப்பதே இதன் நோக்கமாகும்.

பிரத்யேக தாய்ப்பால் மற்றும் சத்துமிக்க உணவு குறித்த முக்கிய கருப்பொருள்களை மையமாகக் கொண்ட பிரச்சாரங்கள் மூலம் அடிப்படை ஊட்டச்சத்து விழிப்புணர்வை மேம்படுத்த நாடு தழுவிய அளவில் இந்த ஒரு மாத நிகழ்வில் கவனம் செலுத்தப்படும்.




# இண்டியா கூட்டணி சனாதன தர்மத்தை இழிவுபடுத்துகிறது

## உதயநிதியின் பேச்சை சுட்டிக்காட்டிய அமித் ஷா

எதிர்க்கட்சிகள் அமைத்துள்ள இண்டியா கூட்டணி சனாதன தர்மத்தை இழிவுபடுத்துகிறது என்று மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா குற்றம் சாட்டியுள்ளார்.

ராஜஸ்தானில் இந்த ஆண்டு இறுதிக்குள் சட்டமன்றத் தேர்தல் நடைபெற உள்ள நிலையில், அங்கு நடைபெற்ற தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் அமித் ஷா உரையாற்றினார். அப்போது அவர், "இண்டியா கூட்டணி கடந்த இரண்டு நாட்களாக சனாதன தர்மத்தை இழிவுபடுத்தி வருகிறது. வாக்கு வங்கி அரசியலுக்காக திமுக தலைவர்களும் காங்கிரஸ் தலைவர்களும் சனாதன தர்மத்தை ஒழிக்க வேண்டும் என்று பேசி வருகிறார்கள். நமது சனாதன தர்மத்தை இவர்கள் இழிவுபடுத்துவது முதல்முறையல்ல.

மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது, நாட்டின் வளத்தில் சிறுபான்மையினருக்கே முன்னுரிமை அளிக்கப்படும் என பேசினார். ஆனால், நாம்(பாஜக) ஏழைகள், பழங்குடி மக்கள், தலித்துகள், பிற்படுத்தப்பட்ட மக்களுக்கே முன்னுரிமை கொடுக்கப்பட வேண்டும் என சொல்கிறோம். பிரதமர் மோடி மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டால் சனாதனம்தான் நாட்டை ஆளும் என காங்கிரஸ் கூறி இருக்கிறது. லஷ்கர் இ தொய்பா பயங்கரவாத அமைப்பைவிட இந்து அமைப்புகள் ஆபத்தானவை என ராகுல் காந்தி கூறி இருக்கிறார்" என தெரிவித்தார்.

இதனிடையே, சனாதன தர்மம் குறித்த தமிழக அமைச்சர் உதயநிதியின் பேச்சுக்கு பாஜக மாநில தலைவர் அண்ணாமலை கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். "சனாதன தர்மம் குறித்த உதயநிதியின் பேச்சை நாட்டில் உள்ள 142 கோடி மக்களும் எதிர்க்க வேண்டும். ஏனெனில், ஒரு குறிப்பிட்ட மதத்துக்கு எதிராக அவர் வெறுப்பை விதைத்திருக்கிறார். அவரது உரை எழுதப்பட்டு, வரிக்கு வரி அவரால் பேசப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட கலாச்சாரத்தை அழிக்க வேண்டும் என்பது இன அழிப்புக்கான அழைப்பு. சனாதன தர்மம் என்ற வார்த்தை கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களுக்கு முன் உருவானது. சனாதன தர்மம் என்பது நிலையானது; அழிவில்லாதது என்பது பொருள். சனாதன தர்மத்தை அழிக்க வேண்டும் என்றால் எல்லா கோயில்களையும்



அழிக்க வேண்டும்; மக்களின் ஆன்மிக பழக்க வழக்கங்களை அழிக்க வேண்டும். சனாதன தர்மத்தை அழிக்க உதயநிதி ஸ்டாலின் யார்?'' என அண்ணாமலை கேள்வி எழுப்பி உள்ளார்.

உதயநிதியின் பேச்சு குறித்த கேள்விக்கு பதில் அளித்துள்ள பிகார் முன்னாள் துணை முதல்வர் சுசில் மோடி, ''உதயநிதி ஸ்டாலினை கைது செய்து சிறையில் அடைக்க வேண்டும். அவர் சமூகத்தில் வெறுப்பை பரப்புகிறார். உதயநிதியின் பேச்சு தேசவிரோத செயல்'' என குற்றம் சாட்டியுள்ளார். இந்த விவகாரம் குறித்து கருத்து தெரிவித்துள்ள பாஜக தேசிய செய்தித் தொடர்பாளர் அணில் அந்தோனி, ''உதயநிதியின் பேச்சு அபாயகரமானது. இது ஒரு மதவாத கருத்து. பிரதமர் நரேந்திர மோடியை மக்கள் ஏன் ஆதரிக்க வேண்டும் என்பதற்கு இது மற்றுமொரு காரணம். ஆபத்தான, மதவாத, ஊழல் கூட்டணியான இண்டியா கூட்டணியை மக்கள் வரலாற்றின் குப்பைத் தொட்டியில் வீச வேண்டும்'' என தெரிவித்துள்ளார்.

முன்னதாக, சென்னையில் நேற்று நடைபெற்ற தமிழக முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் சனாதன ஒழிப்பு மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய உதயநிதி ஸ்டாலின், ''இந்த மாநாட்டின் தலைப்பே மிகவும் சிறப்பாக அமைந்திருக்கின்றது. 'சனாதன எதிர்ப்பு மாநாடு' என்று போடாமல் 'சனாதன ஒழிப்பு மாநாடு' என்று நீங்கள் போட்டிருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய வாழ்த்துகள். சிலவற்றை நாம் ஒழிக்கத்தான் வேண்டும். எதிர்க்க முடியாது. கொசு, டெங்கு காய்ச்சல், மலேரியா, கொரோனா இதையெல்லாம் நாம் எதிர்க்கக் கூடாது. ஒழித்துக்கட்ட வேண்டும். அப்படித்தான் இந்த சனாதனம். சனாதனம் என்பதை எதிர்ப்பதைவிட, ஒழிப்பதே நாம் செய்ய வேண்டியதே முதல் காரணம். எனவே, இந்த மாநாட்டிற்கு மிகப் பொருத்தமான தலைப்பு வைத்திருக்கிறீர்கள். அதற்கு என்னுடைய பாராட்டுக்கள்'' என தெரிவித்திருந்தார்.

# ஒரே நாடு, ஒரே தேர்தல் நாட்டின் வளர்ச்சிக்கு அவசியம்

## முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார்



திருவள்ளூர், திருவள்ளூரில் அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர் கூறியதாவது;

நாட்டின் வளர்ச்சிக்கு ஒரே நாடு, ஒரே தேர்தல் அவசியம் என அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் கூறினார். திருவள்ளூர், திருவள்ளூரில் அதிமுக முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது ஒரே நாடு, ஒரே தேர்தல் குறித்து செய்தியாளர்கள் எழுப்பிய கேள்விக்கு அவர் கூறியதாவது:-

''நாட்டின் வளர்ச்சிக்கு ஒரே நாடு, ஒரே தேர்தல் அவசியம். ஒரே நாடு, ஒரே தேர்தலால், மக்களின் வரிப்பணம் வீணாவது தவிர்க்கப்படும். காலத்தின் கட்டாயத்தின்படி, இந்தியா முழுவதும் சட்டமன்றத்திற்கும், நாடாளுமன்றத்திற்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவது நல்ல விஷயம்.

முதல்அமைச்சர் கூறியது போல் அதிமுக ஒன்றும் விபரீதம் தெரியாமல் ஆதரிக்கவில்லை. ஒரே நாடு, ஒரே தேர்தலால் வாக்குப்பதிவு சதவீதம் அதிகரிக்கும். ஒரே நாடு, ஒரே தேர்தலை நாங்கள் தைரியமாக எதிர்கொள்வோம் என கூற திமுக அஞ்சுகிறது.'' இவ்வாறு அவர் கூறினார்.

# ஐஐடி மெட்ராஸ் தனது எக்சிகியூட்டிவ் எம்பிஏ பாடத்திட்டத்தில் 'சர்வதேச ஆழ்ந்த கற்றல்' முறையை இணைத்துள்ளது






கற்றல் ஆழமாக இருப்பின், அந்தக் கற்றல் மிகவும் பயனுள்ளதாகவும் சுவாரஸ்யமாகவும் இருக்கும். சென்னையில் உள்ள இந்திய தொழில்நுட்பக் கழக (ஐஐடி மெட்ராஸ்) மேலாண்மைக் கல்வித்துறையின் பணிபுரியும் தொழில் வல்லுநர்களுக்கான எக்சிகியூட்டிவ் எம்பிஏ பாடத்திட்டத்தில் 'சர்வதேச ஆழ்ந்த கற்றல்' என்ற பாடத் தொகுப்பு சேர்க்கப்பட்டுள்ளது.

உலகளாவிய தலைமைத்துவம், கலாச்சார நுண்ணறிவு ஆகியவை தான் சர்வதேச ஆழ்ந்த கற்றல் பாடத்திட்டத்தின் மையக் குறிக்கோளாகும். இந்த முன் முயற்சியின் ஒரு பகுதியாக, எக்சிகியூட்டிவ் எம்பிஏ பாடத்திட்டத்தின் '23 மற்றும் '24 பிரிவைச் சேர்ந்த மாணவர்கள் பலர் 9 நாள் ஆழ்ந்த கற்றல் நிகழ்ச்சியில் பங்கேற்றனர். பெல்ஜியம் நாட்டின் பிரசல்ஸ் நகரிலும், ஃபிரான்ஸ் நாட்டின் பாரிஸ், லில்லே ஆகிய நகரங்களிலும் IESEG ஸ்கூல் ஆஃப் மேனேஜ்மெண்ட் என்ற கல்வி நிறுவனத்தில் இந்நிகழ்ச்சி நடத்தப்பட்டது.

உலகளாவிய கலாச்சாரங்களை அறிந்து கொள்ளவும், ஐரோப்பா போன்ற சிக்கலான சமூக-கலாச்சார அமைப்பைக் கொண்ட பிராந்தியத்தில் எவ்வாறு வணிகம் நடைபெறுகிறது என்பதை முழுமையாகப் புரிந்து கொள்ளவும் இந்த வகுப்பறை அமர்வு ஒரு வாய்ப்பாக அமைந்திருந்தது.

ஐரோப்பாவில் புத்தொழில் நிறுவனங்களுக்கு வழிகாட்டு மையமாகத் திகழும் புகழ் வாய்ந்த டெகத்லானில் உள்ள கண்டுபிடிப்பு மற்றும் ஆராய்ச்சி மையத்தைப் பற்றி மாணவர்கள் பார்வையிட்டனர். அதே போன்று பிரான்சின் போக்குவரத்து கட்டமைப்புக் குறித்து முழுமையாக அறிந்து கொள்ளும் வகையில் போர்ட்ஸ்-டி-லில்லே (பிரான்சின் மிகப் பெரிய உள்நாட்டு நதித்துறை முகம்) பற்றிய ஒருபார்வையும் அறிய முடிந்தது. அதே போன்று ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர்களால் நிர்வகிக்கப்படும் ஐரோப்பிய நிர்வாகத்தின் சிக்கலான இயக்கவியல் பற்றிய புரிதல் மாணவர்களுக்கு தெரியவந்தது. சமூக-கலாச்சார அனுபவத்தைப் பெறும் வகையில் சொய்ரி எனப்படும் பிரெஞ்சு குடும்பங்களில் நடைபெறக் கூடிய விருந்துடன் இந்த நிகழ்வு நிறைவடைந்தது.

மேலாண்மைக் கல்வித்துறை அடுத்த பிரிவுக்கான விண்ணப்பங்களை வரவேற்கிறது. விண்ணப்பிக் கடைசி நாள் 19 அக்டோபர் 2023. விருப்பமுள்ள மாணவர்கள் ஆன்லைன் வாயிலாக விண்ணப்பிக்கலாம். https://doms.iitm.ac.in/emba/

இப்பாடத் திட்டத்தின் தனித்துவ அம்சங்களை விளக்கிய ஐஐடி மெட்ராஸ் மேலாண்மைக் கல்வித்துறைத் தலைவர் பேராசிரியை எம்.தேன்மொழி கூறும் போது, ''நவீன பாடத்திட்டம், செயல்திட்டம், டிஜிட்டல் முறையில் கவனம் செலுத்துதல், வலுவான குழுக் கற்றல் ஆகியவை தொழில் வல்லுநர்களை புதிய மாற்றத்தையும், நிறுவனங்களில் வளர்ச்சியையும் ஏற்படுத்தும் தலைவர்களாக மேம்படுத்துகின்றன'' எனக்குறிப்பிட்டார்.

வணிகப் பிரச்சனைகளுக்கு கோட்பாடு கருத்துகளை பயன்படுத்தும் மூன்று திட்டங்கள் உள்பட கடுமையான, நடைமுறை சார்ந்த பாட நெறிமுறைகளை இந்த இரண்டாண்டு பாடத்திட்டம் உள்ளடக்கியதாகும். டிஜிட்டல் பொருளாதாரம், உலகளாவிய உத்திகள், தொழில்துறையின் 4.0 தொழில்நுட்பங்கள் போன்ற தொழில் துறைக்கு தேவையான களங்களில் அதிநவீன அறிவை வழங்குவது எக்சிகியூட்டிவ் எம்பிஏ பாடத்திட்டத்தின் தனித்துவ விற்பனைப்புள்ளியாகும் (USP)

முக்கிய மேலாண்மைக் கருத்துகள் மற்றும் அவற்றின் பயன்பாடுகள், நிஜ உலகின் சவால்கள், வணிகக்களங்களுக்கான ஒருங்கிணைந்த சிந்தனைகள், உலகளாவிய முன்னோக்குகள், முடிவெடுத்தலில் பகுப்பாய்வு மற்றும் டிஜிட்டல் உட்பொதித்தல் போன்ற பல்வேறு அம்சங்களில் எக்சிகியூட்டிவ் எம்பிஏ பாடத்திட்டம் கவனம் செலுத்துகிறது.

இத்திட்டம் குறித்து விவரித்த ஐஐடி மெட்ராஸ் மேலாண்மைக் கல்வித்துறை EMBA திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர்டி ஜே. கமலநாபன் கூறுகையில், ''கிளாசிக்ஸ் தவிர இப்பாடத்திட்டத்தில் இணையப் பாதுகாப்பு மற்றும் அதன் பயன்பாடுகள், நிச்சயமற்ற சூழலில் முடிவெடுத்தல், நிறுவனத் தலைமை மற்றும் மாற்றம், முதலீட்டு மேலாண்மை போன்ற சமகால வணிகத்திற்கு அவசியமான பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன'' எனக்குறிப்பிட்டார்.

ஐஐடி மெட்ராஸ் மேலாண்மைக் கல்வித்துறை EMBA திட்ட ஒருங்கிணைப்பாளர் பேராசிரியை வி.விஜயலட்சுமி கூறும் போது, ''வணிகத்தில் செயற்கை நுண்ணறிவு, வடிவமைப்பு சிந்தனை, தொழில் முனைவு, வணிகத்தில் நிலைத்தன்மை, நவீன உற்பத்தி செயல்முறைகள் உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் மாணவர்கள் திறமையை மேம்படுத்திக் கொள்ளமுடியும்'' என்றார்.

பணிபுரியும் தொழில் வல்லுநர்கள் இடைக்கால பணியில் தகுதி சேர்க்கும் வகையில் பாடநெறியின் இடம் பெற்றுள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:

* ஆழ்ந்த செயல்பாட்டு மற்றும் பரந்த தொழில் துறைகள் அறிவு

* வரைமுறைக்கு உட்பட்டு வணிக முடிவு எடுக்க ஏதுவாக

**ஒருங்கிணைந்த முன்னோக்கு**

* உலகளாவியவணிகஅமைப்பிற்குபங்களி ப்பைவழங்கும்வகையில்

**தலைமைத்துவப்பண்புகள்**

ஜனவரி 2024 முதல், மாற்று வார இறுதி நாட்களில் நேரடி வகுப்புகள் நடைபெறும்.

மாணவர் சேர்க்கைக்கு தகுதியாக, ஏதேனும் ஒரு துறையில் இளங்கலைப் பட்டப்படிப்பில் 60% அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்றிருக்கவேண்டும். குறைந்தபட்சம் 3 வருட பணிஅனுபவம் அவசியம். நுழைவுத் தேர்வு மற்றும் மேலாண்மை கல்வித்துறையால் காணொலி வாயிலாக நடத்தப்படும் நேர்காணல் மூலம் தேர்வு செய்யப்படுவார்கள்.



# சனாதன சர்ச்சை.. "தக்க பதிலடி" பிரதமர் மோடி போட்ட உத்தரவு

சென்னையில் நடைபெற்ற சனாதன ஒழிப்பு மாநாட்டில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேசிய கருத்துக்கு பா.ஜ.க. உள்ளிட்ட கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்தன. இதற்கிடையே அவர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதிக்கு, ஓய்வுபெற்ற நீதிபதிகள், எழுத்தாளர்கள் உள்ளிட்ட 262 பேர் கடிதம் எழுதினர்.

மேலும் சனாதன பேச்சு தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மீது உத்தரபிரதேச மாநிலம் ராம்பூரில் உள்ள சிவில் லைன்ஸ் காவல்நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. அமைச்சர் உதயநிதியின் கருத்துக்கு ஆதரவாக பேசிய கர்நாடக மந்திரி பிரியங் கார்கே மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சனாதனத்தை தவறாக பேசினால் உரிய பதிலடி கொடுக்க வேண்டும் என்று மத்திய அமைச்சரவை கூட்டத்தில் பிரதமர் மோடி அறிவுறுத்தியதாக தகவல் வெளியாகி உள்ளது.

டெல்லியில் நடைபெற்ற மத்திய அமைச்சரவை கூட்டத்தில் பேசிய பிரதமர் மோடி, எந்த மதத்தையும் இழிவுபடுத்துவதற்கு யாருக்கும் உரிமை இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்தியாபாரத் பெயர் சர்ச்சை தொடர்பாக அங்கீகரிக்கப்பட்டவர்களே பதில் அளிக்க வேண்டும் எனவும் மத்திய மந்திரிகளுக்கு பிரதமர் மோடி அறிவுறுத்தியுள்ளார்.


**பேனா குரல்**
**PENA KURAL**
தமிழ் மாத இதழ்

உரிமையாளர் & அச்சிட்டு வெளியிடுபவர் :
நா வீ சிவசங்கர்

ஆசிரியர் : ராதிகா. சி, B.E.,

துணை ஆசிரியர்கள் :
துரை. சந்துரு, ந.திவாணன், M.சந்திரசேகர் K.அழகர்சாமி, வீ.அய்யனார், பி.ஸ்டாலின் பா.கார்த்திகேயன், B.நாராயணசாமி, T.சிவக்குமார், M.அறிவுநிதி

தலைமை நிருபர்கள் :
பா.நவின்குமார், R.ஹரிகிருஷ்ணன், பா.சரவணன், A.தங்கராஜ், K.மாரிதுரை, ம.திலிப் குமார்

நிருபர்கள் :
Ba.சரவணன், தமிழ் மணி, உ.சரவணன், கா.கலைமணி, தி.பாமா, ஜெபசீலன், கு.தீபக், தமிழினி, இளைய தர்ஷினி, P.ஜேசுராஜ், பா.அசோக்குமார், J.தனசேகர், தமிழ் வீரன், கா.சுபுலட்சுமி, அன்பு மணி, R.பிரகாஷ்,

புகைப்பட நிருபர்கள் :
வா.கவியரசன், கா.மிதுன் சாய்

ஓவியங்கள்: வீ.சந்தோஷ் குமார்

சட்ட ஆலோசகர்: G. நாகராஜ், B.Sc., LLB.,

இதழ் வடிவமைப்பு: *Tamilni Printz*

நிர்வாக அலுவலகம் :
**பேனா குரல்**
3/885, பிள்ளையார் கோவில் தெரு,
மேட்டுக்குப்பம், ஓ.எம்.ஆர், சென்னை,
தமிழ் நாடு, இந்தியா - 600097.

தொடர்புக்கு :
044-35906002, 9962245338
info@penakural.com
penakural@yahoo.com
www.penakural.com

* பேனா குரல் இதழில் வெளியாகும் பேட்டிகள், கதை, கட்டுரை, விளம்பரங்கள் மற்றும் செய்திகளில் வரும் கருத்துக்கள் சம்பந்தப்பட்டவர்களையே சாரும்.
* பேனா குரல் பத்திரிகை சம்பந்தப்பட்ட அனைத்து வழக்குகளும் சென்னை மாநகர நீதிமன்ற எல்லைக்குட்பட்டது.



Printed, Published and Owned by: **NV SIVASHANKAR** | Printed at **J.M.PROCESS**, No.29, V.N.Dass Road, Border Thottam, Mount Road, Chennai - 600002. | Published at No.7/13, 2nd Floor, Ponmanachemmal Street, MGR Nagar, Chennai - 600078. | Editor: **RATHIKA S**


V.AYYANAR
9884166636
NO.3/885,PILLAYAR KOIL STREET
OMR, METTUKUPPAM
CHENNAI-600097
DEEPSHIKA AUTO WORKS
ALL KINDS OF TWO WHEELERS REPAIRING, WATER WASH SERVICE CENTRE
email: deepshikaautoworks@gmail.com


BM
Electrical, Plumbing
&
Air Conditioner Work
B. MANIKANDAN
9884555002
044 48612123
manikandanb2512@gmail.com
3/885, Pillayar Koil Street,
Mettukuppam, OMR, Chennai - 600097


S D A
வள்ளுவன் வாய்மை எப்படி பொய்த்து போகாதோ!
அதேபோன்று விலையும்! தரமும்!
உங்கள் ஸ்ரீதேவி ஏஜென்சிஸ் - ல் பொய்த்து போகாது!
பண்டிகைகால
அதிரடி ஆஃபர்களுக்கும் உண்டு...
ஸ்ரீதேவி ஏஜென்சிஸ்
Pay 50%
BALANCE AMOUNT
DAILY EMI
Wholesale Rate
Retail Shopping
0% Finance
Available
Rs.12,999/-
Compo Offer
Rs.999/-
Rs.3699/-
Rs.3999/-
Rs.6999/-
Rs.7999/-
Avail Offer Rs.1000/- Advance
MANUFACTURING &
WHOLESALE SUPPLIER
CONTACT
8939406206
No.5, Poonamalli High Road, Near MGR University, Maduravayal, Chennai - 600095.